பக்கங்கள்: 17 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 ஆனி 26 ஞாயிற்றுக்கிழமை 11.07.2021 கதிர் 248

**இனி இது ரகசியம் அல்ல!**

தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் நாடாளுமன்ற உறுப்பினர் களுக்கு - சிலருக்கு - போதிய நேரம் ஒதுக்கப்படுகின்றமை தொடர்பாக இலங்கைத் தமிழர சுத் தலைவர் மாவை சேனாதி ராசா, தொலைபேசி அழைப்பு எடுத்து ஐக்கிய மக்கள் பக்கம்02

## பருத்தித்துறையில் 23 பேருக்குக் 'கொரோனா' முடக்கப்படுகின்றது இரண்டாம் குறுக்குத் தெரு

(இ.கலையமுதன்)

பருத்தித்துறை, இரண்டாம் குறுக்குத் தெருவில் நேற்று எழு மாறாக முன்னெடுக்கப்பட்ட அதி விரைவு அன்டிஜன் பரிசோதனை யில் 23 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை கண்ட றிப்பட்டுள்ளது.

பருத்தித்துறை சுகாதார வைத் திய அதிகாரியின் அறிவுறுத்த லின் பிரகாரம் நேற்று குறித்த பகுதியில் எழுமாறாக 60 பேரிடம் அதிவிரைவு அன்டிஜன் பரிசோ தனை முன்னெடுக்கப்பட்டது. அவர்களில் 23 பேருக்குக் கொரோ னாத் தொற்றுள்ளமை உறுதிப்ப டுத்தப்பட்டுள்ளது.

தொற்றாளர்களைத் தனி மைப்படுத்தல் நிலையங்களுக்கு அழைத்துச் செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தொற்றாளர் கள் அடையாளம் காணப்பட்ட பருத்தித்துறை, ☞2

## 1,548 தொற்றாளர்கள் நேற்று அடையாளம்

நாட்டில் நேற்று கொரோ னாத் தொற்றுடன் 1,548 பேர் அடையாளம் காணப்பட்டுள் ளனர்.

இந்நிலையில், நாட்டில் இதுவரையான காலப்பகுதி யில் அடையாளம் காணப்பட்ட மொத்தத் ☞2

# தனிமைப்படுத்தல் மையத்தில் இருந்தவாறே அரசுக்கு எதிராக ஜோசப் அணி ஆர்ப்பாட்டம்

## கொத்தலாவ சட்டமூலத்தை உடன் கிழித்தெறி என்று வலியுறுத்து



(இ.கலையமுதன்)

கேப்பாப்பிலவு தனிமைப்படுத்தல் நிலையத்திலிருந்து நேற்று அர சுக்கு எதிராகக் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சேர் ஜோன் கொத்தலாவல தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழக சட்டமூலத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் முல்லைத்தீவு, கேப்பாப்பிலவு விமானப் படைத்தளத்தின் தனிமைப் படுத்தல் நிலையத்தில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்கள். ☞2

## எல்லை மீறிக்கொண்டிருக்கின்றது கோட்டாபயவின் சர்வாதிகார ஆட்சி



### ஜோசப் ஸ்டாலின் கைது ஜனநாயகப் படுகொலை; தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கடும் கண்டனம்

(இ.கலையமுதன்)

கோட்டாபய அரசினுடைய எதேச்சதிகார - சர்வாதிகார ஆட்சி எல்லை மீறிக்கொண்டிருக்கின் றது. இலங்கை ஆசிரியர் சங்கத் தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் கைது ஒரு ஜனநாய கப் படுகொலையாகும்.

- இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தெரிவித் துள்ளது.

அக்கட்சியின் ஊடகப் பேச் சாளர் சட்டத்தரணி க.சுகாஸ் யாழ்ப்பாணத்தில் ☞2

## கொரோனா தொற்றால் மேலும் 33 பேர் மரணம்

நாட்டில் மேலும் 33 கொரோ னாத் தொற்றாளர்கள் உயிரிழந் துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

19 ஆண்களும், 14 பெண் களும் நேற்றுமுன்தினம் இவ் வாறு உயிரிழந்துள்ளனர்.

இதையடுத்து நாட்டில் பதி வான கொரோனா மரணங்க ளின் மொத்த எண்ணிக்கை 3 ஆயிரத்து 467 ஆக உயர்வ டைந்துள்ளது.

## அரசின் அராஜகத்துக்கு கூட்டமைப்பு கண்டனம்

(எஸ்.நிதர்ஷன்)

ஆட்சியாளர்களின் செயற் பாடுகளைக் கண்டித்து போரா டுபவர்களுக்கு எதிராக பாய்கின்ற அரசின் சட்டம் பசில் ராஜபக்ஷ வின் வருகையைக் கொண்டா டியவர்களுக்கு ஏன் பாய வில்லை? வெறுமனே தாங் கள் நினைத்தபடி அராஜகமான முறையிலே அரசு செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது.

- இவ்வாறு குற்றஞ்சாட்டி னார் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்தி ரன் எம்.பி.

இலங்கை ☞15



## பொலிஸாரின் கைதுகளை ஏற்றுக்கொள்ள முடியாது!

### அமைச்சர் நாமல் கருத்து

போராட்டத்தில் ஈடுபடுபவர்க ளைப் பொலிஸார் கைதுசெய் யும் நடவடிக்கையை தான் ஒரு போதும் ஏற்றுக்கொள்ளவில்லை என அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

(விரிவான செய்தி 4ஆம் பக்கத்தில்....)



## ஜனாதிபதி - கூட்டமைப்பு சந்திப்பு எப்போது? மறு அழைப்பு இன்னமும் கிடைக்கவில்லை

### சுமந்திரன் எம்.பி. பதில்

(எஸ்.நிதர்ஷன்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப் புக்கும் ஜனாதிபதிக்கும் இடை யில் விரைவில் சந்திப்பு நடை பெறுமென அறிவிக்கப்பட்டிருந் தும் அதற்கான மறு அழைப்பு இன்னமும் கிடைக்கவில்லை என்று கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

ஜனாதிபதிக்கும் கூட்டமைப் புக்கும் இடையில் சந்திப்பு நடை பெறவுள்ளது என அறிவிக்கப் பட்டு பின்னர் இடைநிறுத்தப்பட் டிருந்தது. இந்நிலையில் மீண் டும் அத்தகைய சந்திப்புக்கள் இடம்பெறுமா என ஊடகவியலா ளர்களால் ☞15

## மாகாணங்களுக்கிடையிலான பயணத்தடை தொடர்ந்து நீடிப்பு

### பல கட்டுப்பாடுகளில் தளர்வு; புதிய சுற்றறிக்கை வெளியீடு



நாட்டில் தற்போதுள்ள கட் டுப்பாடுகளைத் தளர்த்துவது மற்றும் பொது நடவடிக்கைக ளுக்கு அனுமதி வழங்குவது குறித்து சுகாதார சேவைக ளின் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அசேல குணவர்தன புதிய சுற் றறிக்கையை நேற்று வெளி யிட்டுள்ளார்.

அதன்படி, ☞15

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸாவிடம் முறைப்பாடு செய்தார் என எனது தென்னிலங்கை ஊடக நண்பர் ஒருவரை மேற்கோள் காட்டி என் பத்தியில் குறிப்பிட்டிருந்தேன்.

இதைத் தொடர்ந்து இரண்டு சம்பவங்கள்.

ஒன்று – இந்தப் பத்தியின் தகவல் குறித்து மாவை சேனாதிராசா தமக்கு நெருக்கமான ஓரிருவரிடமும் விசனமும், கவலையும் தெரிவித்திருக்கின்றார்.

தாம், சஜித் பிரேமதாஸாவுடன் இது குறித்துப் பேசியமை உண்மை, அதுவும் சஜித் பிரேமதாஸ வேறு விடயம் தொடர்பில் தமக்கு அழைப்பு எடுத்துப் பேசிய சமயமே தாம் இதனைப் பிரஸ்தா பித்தார் என்று மாவை சேனாதிராசா குறிப்பிட்டிருக்கின்றார்.

ஆக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு போதிய நேரம் ஒதுக்கப்படுவதில்லை என்ற பொத்தம் பொதுவான ஆதங்கத்தையே தாம் முன்வைத்தார் என்றும், எனது பத்தியில் நேற்று குறிப்பிடப்பட்ட பிற விடயங்கள் இட்டுக்கட்டுக் கூறப்பட்டவை என்றும் அவர் தமக்கு நெருக்கமானோருக்கு சொல்லியிருக்கின்றார்.

எனக்கு மேற்படி கொழும்புத் தகவலைத் தந்த ஊடக நண்பருக்குத் தொலைபேசி அழைப்பு எடுத்து இந்த விடயம் குறித்துக் கேட்டேன்.

*"எதிர்க்கட்சித் தலைவர் சாட்சியம் சொல்ல வரமாட்டார் என்ற எண்ணத்தில் அவர் அப்படிக் கூறுகின்றார் போலும். இந்த விடயம் குறித்து சஜித் பிரேமதாஸ தமது சகாக்களுடன் பேசியுள்ளார். அவர்களின் தொடர்புகளைத் தருகிறேன். பேசிப் பாருங்கள்"* – என்றார்.

*"வேண்டாம், வேண்டாம். தேவைப்பட்டால் பார்த்துக் கொள்கிறேன்."* – என்று பதிலளித்தேன்.

இந்த வியடம் குறித்து நேற்றிரவு சுமந்திரனிடம் தொடர்பு கொண்டு கேட்டேன்.

தாம் பேசாதவை எல்லாம் பேசினார் எனத் தெரிவித்து உங்கள் பத்திரிகையிலும், அதேபோல நேற்றுமுன்தினம் 'த ஐலண்ட்' பத்திரிகையிலும் விடயங்கள் வெளிவந்திருக்கின்றன என்று மாவை அண்ணன் கவலைப்பட்டார் என்ற சாரப்பட அவரும் குறை கூறினார்.

ஆனால், இதற்கிடையில் – நான் பேசுவதற்கு முன்னர் – எனது செய்தியாளர் எஸ்.நிதர்ஷன் இவ்விடயத்தை ஒட்டி சுமந்திரனின் வாயை நோண்டியிருக்கின்றார்.

என்னிடம் தமது கட்சித் தலைவர் மாவை சேனாதிராசாவுக்குப் பரிந்து பேசிய சுமந்திரனின் வாயிலிருந்து, என் செய்தியாளர் பிடுங்கிய விடயம் வேறு விதமாக இருந்தது.

சுமந்திரன் தெரிவித்தவை என்று குறிப்பிட்டு செய்தியாளர் அனுப்பிய செய்தியின் முழு வடிவம் வருமாறு:–

*தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நேரம் கொடுக்கப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டு அபத்தமானது எனத் தெரிவித்துள்ள அக்கட்சியின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் கட்சிக்குள்ளே பேச வேண்டிய விடயத்தைக் கட்சிக்குள்ளேயே பேச வேண்டும் என்றும் இது பிரதான எதிர்க்கட்சியினருடன் பேச வேண்டிய விடயமல்ல என்றும் சாடியுள்ளார்.*

*கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நாடாளுமன்றத்தில் பேசுவதற்கு நேரம் கொடுக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டுத் தொடர்பிலும், இது தொடர்பில் தமிழரசுக் கட்சித் தலைவர் பிரதான எதிர்க் கட்சியுடன் பேசினார் எனவும் ஊடகங்களில் வெளிவந்த தகவல் குறித்தும் கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது சம்பந்தமாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–*

*எமது கட்சியிலுள்ள அனைவருக்கும் பேசுவதற்கு நேரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒருவருக்கும் பேசுவதற்கு நேரம் கொடுக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு அபத்தமானது. ஆனால் அந்த நேரத்தைப் பகிர்ந்தளிப்பதிலே பலருக்கு அதிருப்தி இருக்கின்றது.*

*அதாவது தங்களுக்குக் குறைவான நேரம், மாறுபட்ட நேரம் கிடைக்கிறது என்றவாறான அதிருப்தி உள்ளது. இப்பொழுது நேரம் ஒதுக்கும் அந்தப் பணியைச் செய்கிறவர் எமது நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன். அவரிடத்திலேதான் அந்தப் பொறுப்பைக் கொடுத்திருக்கிறோம்.*

*நானும் பேசுவதாக இருந்தால் அவரிடத்திலே நேரத்தைக் கேட்டுத்தான் பெற்றுக்கெண்டு பேச முடியும். அது சம்பந்தன் ஐயா பேசுவதாக இருந்தாலும் அவரிடத்திலேயே நேரத்தைக் கேட்டுப் பெற்றுக் கொண்டு தான் பேச முடியும். அதைப் பகிர்ந்தளிப்பதிலே சிலருக்கு அதிருப்தி இருப்பதாகத் தெரிகிறது. அதை எங்களுடைய நாடாளுமன்றக் குழுக் கூட்டத்திலே பேசித் தீர்த்துக் கொள்ளுவோம்.*

*இதேவேளை கூட்டமைப்பின் சில நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குப் பேசுவதற்கு நேரம் வழங்கப்படுவதில்லை என்று தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா பிரதான எதிர்க் கட்சியுடன் பேசினார் என ஊடகங்களில் வெளிவந்த செய்தி தொடர்பில் கேட்ட போது –*

*அது எதிர்க்கட்சித் தலைவருடன் பேசுகின்ற விடயமல்ல. அது எங்களுடைய கட்சிக்குள்ளேதான் அந்தத் தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன. பிரதான எதிர்க் கட்சிக்கும் இதற்கும் எந்தவிதமான சம்பந்தமும் கிடையாது.– என்றார்.*

மேலும் அப்படி ஏதும் உண்மையில் உங்கள் கட்சித் தலைவரால் பேசப்பட்டிருக்கின்றதா என வினவிய போது அதைப் பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும் அவர் பதிலளித்தார்.

– இது அந்தச் செய்தி. இனி, வாசகர்களே நிலைமையை ஊகித்துத் தீர்மானித்துக் கொள்ளுங்கள்.

– மின்னல் –

## பருத்தித்துறையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இரண்டாம் குறுக்குத் தெருப் பகுதியை தனிமைப்படுத்துமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரியால் யாழ்ப்பாணம் மாவட்ட அரச அதிபர், வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோரிடம் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் பருத்தித்துறை, இரண்டாம் குறுக்குத் தெருவில் 53 குடும்பங்களை உள்ளடக்கிய பகுதி இன்று காலை 6 மணி தொடக்கம் தனிமைப்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## 1, 548 தொற்றாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தொற்றாளர்களின் எண்ணிக்கை 2 இலட்சத்து 73 ஆயிரத்து 31 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, தொற்றில் இருந்து நேற்று மேலும் 1,804 பேர் குணமடைந்தனர்.

இதன்படி இதுவரையில் 2 இலட்சத்து 42 ஆயிரத்து 839 பேர் தொற்றில் இருந்து குணமடைந்துள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

மேலும், தொற்றுக்குள்ளான 26 ஆயிரத்து 758 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

---

## எல்லை மீறிக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

இலங்கை இராணுவ ஆட்சியை நோக்கி நகர்ந்து கொண்டிக்கின்றது. இங்கு ஜனநாயகப் படுகொலை தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

சேர் ஜோன் கொத்தலாவல தேசிய பாதுகாப்பு கல்லூரி சட்டமூலத்துக்கு எதிராக ஜனநாயக வழியில் அஹிம்சை முறையிலே எதிர்ப்புத் தெரிவிக்க முற்பட்ட இலங்கை ஆசிரியர் சங்கத்தினுடைய பொதுச்செயலாளர் – மனித உரிமைச் செயற்பாட்டாளர் ஜோசப் ஸ்டாலின் கைதுசெய்யப்பட்டு முறையற்ற விதத்தில் தனிமைப்படுத்தப்பட்டு இருக்கின்றார். இந்தக் கைதையும் தனிமைப்படுத்தல் செயற்பாட்டையும் நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இலங்கை பாராளுமன்றத்தில் இருக்கின்ற சேர் ஜோன் கொத்தலாவல தேசிய பாதுகாப்பு கல்லூரி சட்டமூலம் என்பது இலங்கையை சட்டரீதியாக இராணுவ மயப்படுத்தலுக்கு உட்படுத்துவதற்கு வழிவகுக்கின்ற ஒரு சட்டமூலம்.

இந்தச் சட்டமூலத்தை ஜனநாயக வழியிலே எதிர்த்த இலங்கை ஆசிரியர் சங்கத்தினுடைய பொதுச்செயலாளர் உள்ளிட்டவர்களை சுகாதார விதிகளை மீறினர் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்த பொலிஸார், அவர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தினர். நீதிமன்றம் அவர்களுக்குப் பிணை வழங்கியது. எனினும், அவர்கள் வலுக்கட்டாயமாகக் கேப்பாப்பிலவு இராணுவ முகாமில் தனிமைப்படுத்தல் என்ற பெயரில் அடைத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

உண்மையில் இது ஒரு கடத்தல் பாணியிலேதான் தனிமைப்படுத்தல் அமைந்திருக்கின்றது என்பது கசப்பான உண்மை.

குறித்த சட்டமூலமானது ஒரு பல்கலைக்கழகத்தை இராணுவ மயப்படுத்தி அந்தப் பல்கலைக்கழகத்தில் வெளியேறுகின்றவர்களை இராணுவ மயமாக்கலுக்கு உட்படுத்தி அதற்குப் பழக்கப்படுத்தி வெளியேற்றுகின்ற செயற்பாட்டுக்கு அனுமதிக்கின்றது.

இந்தக் கல்லூரி இலங்கையினுடைய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டது என்பது அவதானிக்கப்பட வேண்டிய விடயம். ஆகவே, இது ஒரு தனியான சட்டத்தின் கீழ் ஆளப்படுகின்ற ஒரு கல்லூரியாக இருக்கின்றது.

இதனுடைய தாற்பரியத்தை உணர்ந்தே ஜோசப் ஸ்டாலினும் சகோதர மொழி பேசுகின்ற நபர்களும் இணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தி இருந்தார்கள். அதற்காக அவர்கள் கைதுசெய்யப்பட்ட முறையே ஜனநாயகத்துக்கு முரணானதாக இருந்தது .

கோட்டாபய அரசினுடைய எதேச்சதிகார – சர்வாதிகார ஆட்சி எல்லை மீறிக் கொண்டிருக்கின்றது – என்றார்.

---

## தனிமைப்படுத்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் மற்றும் பௌத்த துறவிகள் இருவர் உள்ளிட்ட 16 பேர் இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்கள்.

இந்நிலையில், இவர்கள் நேற்று தனிமைப்படுத்தல் மையத்திலிருந்தே கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளார்கள்.

கொத்தலாவ சட்டமூலத்தை உடன் கிழித்தெறி என்று தமிழிலும் சிங்களத்திலும் எழுதப்பட்ட வாசகங்களைத் தாங்கியவாறு தனிமைப்படுத்தல் நிலையத்தில் இருந்து இந்தக் கவனயீர்ப்புப் போராட்டத்தை அவர்கள் முன்னெடுத்துள்ளார்கள்.


# அறிவித்தல்

U-Fresh

## மக்கள் சற்று அவதானம்...!

அனைத்து கடை உரிமையாளர்களுக்கும்,
வாடிக்கையாளர்களுக்கும் வணக்கம்.

எமது **U - Fresh** குளிர் பானம் வடபகுதியில் (யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா) விநியோக உரிமம் **Rathee Event Management** நிறுவனத்துக்கு மட்டுமே வழங்கப்பட்டு உள்ளது. அத்துடன் வேறு எவருக்கும் வழங்கப்படவில்லை.

இன்று நாம் அறிந்தமட்டில் பருத்தித்துறை, வடமராசி போன்ற இடங்களில் வெளி மாவட்டத்தில் இருந்து அங்கிகரிக்கப்படாத சிலர் விநியோகம் செய்வது அறியப்பட்டுள்ளது.

ஆகையால் நீங்கள் சற்று அவதானத்துடன் இருக்குமாறு தெரிவித்துக்கொள்கிறோம்.

அத்துடன் அவ்வாறு மேல் குறிப்பிடப்பட்ட இடங்களில் இருக்கும் இந்த குளிர்பானத்தில் வேறு எதும் இரசாயன பதார்த்தம் கலக்கப்பட்டுள்ளதா என்றும் ஒரு சந்தேகம் உள்ளது.

இவ்வாறு எவரேனும் வருவது அறிந்தால் உடனடியாக எமது விநியோகஸ்தர்களும் அறியதருமாறு கேட்டுக்கொள்கிறோம். அத்துடன் வருபவர்கள் நிறுவனத்தின் அடையாள அட்டை கொண்டுவருகிரார்களா என்பதையும் பரிசீலனை செய்யவும்.

இதுபற்றி எமது நிறுவனத்தின் சார்பில் பொலிஸ் முறைப்பாடு செய்துள்ளோம். விரைவில் இவர்களை கைது செய்வதாக பொலிஸ் அதிகாரிகள் வாக்குறுதி வழங்கியும் உள்ளனர், இவ்வாறு கைது செய்ய உங்கள் ஆதரவும் தேவை...!

விநியோகஸ்தர் உத்தியோகபூர்வ தொலைபேசி இலக்கம் **0774737737** மற்றும் மின்னஞ்சல் **inforemlk.com**

குறித்த பகுதி விற்பனை பிரதிநிதி **Suthan 0773257737** அல்லது **0773257747** எனும் இலக்கதுக்கு அறியப்படுதவும்

நன்றி
**U- FRESH Bevrage**

காலைக்கதிர்
Kalaikkathir

## மீதமுள்ள பைஸர் தடுப்பூசிகள் மன்னார் பகுதி மீனவர்களுக்கு

முதன் முறையாக இலங்கைக்கு எடுத்துவரப்பட்ட 26 ஆயிரம் பைஸர் தடுப்பூசிகளில் மீதம் உள்ளவற்றை மன்னார் பகுதியில் உள்ள மீனவர்களுக்கு வழங்க உள்ளோம் என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கொவிட் தடுப்புச் செயலணியில் பதிவு செய்யப்பட்டுள்ள வெளிநாடுகளில் கல்வி கற்கும் 1,130 மாணவர்களுக்கு பைஸர் தடுப்பூசி செலுத்தப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அவர்களும் ஏனைய மாணவர்களுக்கு பைஸர் தடுப்பூசி வழங்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# எரிபொருள்களின் விலையை குறைக்க அனைத்து முயற்சிகளும் எடுக்கப்படும்

## நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவிப்பு



பொது மக்களின் நலன்கருதி எரிபொருள் விலையை குறைப்பது உள்ளிட்ட அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என்று நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தால் இதுவரையில் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளில் ஏதேனும் குறைபாடுகள் இருக்குமாயின் அவை நிவர்த்தி செய்யப்பட்டு நாட்டைக் கட்டியெழுப்ப சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என்றும் நிதி அமைச்சர் கூறினார்.

நிதி அமைச்சில் தமது கடமைகளைப் பொறுப்பேற்ற பின்னர் பெல்லங்கல ரஜ மஹா விகாரைக்கு விஜயம் செய்து வழிபாடுகளில் ஈடுபட்ட நிதி அமைச்சர் அங்கு செய்தியாளர்களை சந்தித்த போதே இவ்வாறு குறிப்பிட்டதுடன் நாட்டின் பொருளாதார நிலைமைகளைக் கவனத்திற்கொண்டு ஜனாதிபதி இது தொடர்பில் தீர்மானங்களை மேற்கொள்வார் என்றும் கூறினார்.

## வவுனியா கூமாங்குளத்தில் வறிய குடும்பத்துக்கு வீடு

வவுனியா, கூமாங்குளம் பகுதியில் வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட குடும்பம் ஒன்றுக்கு வீடு ஒன்று கையளிக்கப்பட்டுள்ளது.

நம் தாயகம் நிறுவனத்தின் உரிமையாளரின் நிதி உதவியில் மாணிக்கதாசன் நற்பணி மன்றத்தால் கட்டப்பட்ட குறித்த வீடு கடந்த வெள்ளிக்கிழமை கையளிக்கப்பட்டது. மூன்று அங்கத்தவர்களைக் கொண்ட குறித்த குடும்பம் வறுமைக் கோட்டின் கீழ் கொட்டில் வீட்டில் வசித்து வந்த நிலையில், அந்தக் குடும்பத்தின் உறைவிடத் தேவையைப் பூர்த்தி செய்யும் முகமாக ஒரு லட்சத்து 75 ஆயிரம் ரூபா செலவில் இந்த வீடு அமைக்கப்பட்டு கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரதேச செயலாளர் நா.கமலதாசன், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை தலைவர் யோகராசா, செட்டிகுளம் பிரதேச சபைத் தலைவர் ஜெகதீஸ்வரன், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் மயூரன், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை உறுப்பினர் சந்திரபத்மன், கலைஞர் மாணிக்கம் ஜெகன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு!

டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளது.

தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் சமூக வைத்திய நிபுணர் ஹிமாலி ஹேரத் இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த மூன்று வாரங்களில், வாரம் ஒன்றிற்கு 700 நோயாளர்கள் என்ற அடிப்படையில் டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பருவப்பெயர்ச்சி மாற்றம் ஏற்படுகின்ற காலப்பகுதியில் ஒவ்வொரு வருடமும் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதற்கமைய, தற்போது பதிவாகும் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடும் என வைத்திய நிபுணர் ஹிமாலி ஹேரத் எச்சரிக்கை விடுத்தார்.

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 9 ஆயிரத்து 361 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

அவர்களில் அதிகளவானவர்கள் மேல் மாகாணத்தில் பதிவாகியுள்ளனர் எனவும் தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

## வியாழேந்திரனின் மெய்ப்பாதுகாவலரால் சுடப்பட்டவருக்கு நீதிகோரி ஆர்ப்பாட்டம் முன்னெடுக்க முற்பட்டவர்கள் கைது

இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரனின் வீட்டுக்கு முன்னாள் அவரது மெய்ப்பாதுகாவலரால் அண்மையில் சுட்டுக்கொல்லப்பட்டவருக்கு நீதி கோரி ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுக்க முற்பட்டவர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை காலை, மட்டக்களப்பு காந்தி பூங்காவுக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட முற்பட்டவர்களையே பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மட்டக்களப்பு நகர்ப் பகுதிக்கு வாகனமொன்றின் ஊடாக வருகை தந்த போராட்டக்காரர்கள், மட்டக்களப்பு மாவட்ட தலைமை பொலிஸ் பொறுப்பதிகாரியால் அச்சுறுத்தப்பட்டு திருப்பி அனுப்பி வைக்கப்பட்டனர்.

இந்நிலையில் ஆர்ப் பாட்டக்காரர்கள் வேறொரு பகுதிக்குச் சென்று, ஆர்ப்பாட்டத்தை முன்னெ டுக்க முயன்றபோது அவர்கள் பயணித்த வாகனத்தையும் அதில் வந்தவர்களையும் கைது செய்து, மட்டக்களப்பு பொலிஸில் தடுப்புக் காவலில் வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இரண்டு அமைச்சுக்களின் விடயதானங்களில் திருத்தம்

இரண்டு அமைச்சுகளின் விடயதானங்கள் திருத்தப்பட்டு அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

நிதி அமைச்சு, பொருளாதார கொள்கைகள் மற்றும் திட்ட அமுலாக்கம் ஆகிய அமைச்சுகளின் விடயதானங்களே மேலும் திருத்தப்பட்டு இவ்வாறு அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் இந்த அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

குறித்த அதிவிசேட வர்த்தமானிக்கு அமைய, நிதி அமைச்சின் கீழ் இருந்த பௌத்த மத மறுசீரமைப்பு நிதியம், புத்த சாசன நிதியம் மற்றும் மத்திய கலாசார நிதியம் ஆகியன ஸ்தாபிக்கப்பட்ட பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்ட அமுலாக்க அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

விளம்பரத் தொடர்புகளுக்கு - தொலைபேசி இலக்கம் - 076 443 8622









# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## பாழ்படும் மாணவர் கல்வி

'வெறுங்கை முழம் போடுவது' என்பார்கள். அப்படிப்பட்ட கைங்கரியத்தைத்தான் செய்து கொண்டிருக்கின்றது நாட்டின் கல்வி அமைச்சு.

கொவிட் 19 தொற்றுப் பரம்பலினால் பாடசாலைக் கல்வி பாதிக்கப்படத் தொடங்கி ஒன்றரை வருடங்களாகி விட்டன.

இந்தக் கொரோனாத் தொற்றுப் பேரிடரினால் அதிகம் பாதிக்கப்பட்ட துறை என்றால் அது பாடசாலைக் கல்விதான்.

பாடசாலைக் கல்வி தொடர்பில் கல்வி அமைச்சும், அமைச்சரும், அரசும், எத்தகைய புள்ளி விவரங்களை வெளியிட்டாலும் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் தேங்கி, முடங்கி, முன்னேற்ற மின்றிக் கிடக்கின்றன என்பது பெற்றோர்களுக்கு நன்கு தெரியும்.

கொவிட் நெருக்கடியிலிருந்து மீளும் வரை மாணவர்கள் ஒன்று கூடிப் பாடசாலைக் கல்வியை வழமை போல கற்கலாம் என்று காத்திருப்பது, அலை ஓய்ந்த பின்னர் குளிக்கலாம் எனக் கருதி கடற்கரையில் காத்திருப்பதற்கு ஒப்பானது என்பதும் எல்லோருக்கும் தெரிந்த யதார்த்தம்தான்.

நிலையை தெளிவானது. மாணவர்கள் பாடசாலைகளில் ஒன்று கூடிக் கல்வி கற்பது என்பது உடனடிச் சாத்தியமான விவகாரம் அல்ல. தொலைதூரக் கல்வி முறையை வழமைப்படுத்திக் கொள்வதுதான் இப்போதைய நிலையில் சாத்தியமானதும் யதார்த்தமானதும் கூட.

அதற்கான உபகரணங்கள், தொழில்நுட்பங்களை தாமதிக்காமல் மாணவருக்கு வழங்குவதுதான் உடனடித் தேவையாகும். அவசரமும் அவசியமும் காட்ட வேண்டிய விவகாரம் இதுதான். ஆனால் இந்த விடயத்தில் சிரத்தையைக் காட்டுவதை விடுத்து கல்வி அமைச்சும், அதிகாரிகளும், அரசுத் தரப்பினரும் வேறு ஏதேதோ பேசிக் கொண்டிருக்கின்றார்கள்.

ஜனாதிபதி தமக்குக் கீழ் உள்ள தொழில் நுட்ப அமைச்சைப் பிரித்து, அதன் இராஜாங்க அமைச்சர் பதவியை நவீன தொழில் நுட்பங்களுடன் பரிச்சயமுள்ள அமைச்சர் நாமல் ராஜபக்ஷவிடம் வழங்கியுள்ளார்.

கொரோனாத் தொற்றுப் பேரிடர் காலத்தில் மாணவர்களுக்கான தொழில்நுட்ப வசதிகளையும் செயலிகளையும் ஏற்படுத்திக் கொடுப்பது அவரது பொறுப்பு. ஆனால் அதில் திருப்திப்படக் கூடிய முன்னேற்றம் ஏதுமில்லை என்பதுதான் விசனத்துக்குரிய உண்மையாகும்.

அடுத்த விடயம், இத்தகைய தொலைத்தூரக் கல்விக்கான தொழில்நுட்ப வசதிகளை மாணவர்கள் பெறுவதாயின், அவர்கள் ஒவ்வொருவருக்கும் 'ஸ்மாட்போன்' மற்றும் இணைய இணைப்பு அவசியமாகும். அதுவும் ஒவ்வொரு வீட்டிலும் எத்தனை மாணவர்கள் உள்ளனரோ அத்தனை 'ஸ்மாட்போனோ' அல்லது 'ரப்' கருவியோ அவசியமாகும்.

மாணவர்களுக்கு இலவசமான 'ரப்' வழங்கும் திட்டம் ஒன்றை அரசு அறிவித்து நடைமுறைப்படுத்துவதாகக் கூறப்பட்டாலும் இலங்கையில் மொத்த மாணவர்கள் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் இது யானைப் பசிக்கு சோளப் பொறி என்ற நிலைமை தான்.

வசதியுள்ள பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு இந்த 'ரப்'வையோ அல்லது 'ஸ்மாட்போன்'களையோ வாங்கலாம் என்றால் இறக்குமதிக் கட்டுப்பாடு காரணமாக சந்தையிலும் அவற்றுக்குத் தட்டுப்பாடு.

நாட்டின் அந்நிய செலாவணிக் கையிருப்பு கரைந்து போன நிலையில் இறக்குமதிகளுக்கு அரசு கட்டுப்பாடு விதித்திருப்பது புரிந்து கொள்ளக் கூடியதுதான். 'ஸ்மாட்போன்'கள், 'ரப்'கள் போன்றவை ஆடரம்பர – சொகுசு – ரக 'எலக்ட்ரோனிக்' பொருள்கள் என்ற வகையில் இறக்குமதித் தடைக்குள்ளாகலாம் என்பதும் புரிந்து கொள்ளத் தக்கதே.

ஆனாலும், அவை மாணவர்களின் கல்விக்கு அத்தியாவசியமானவையாகின்றன. அது மட்டுமல்ல, இந்த நெருக்கடி சமயத்தில் மாணவர் கல்விக்காக அவை பெரும் எண்ணிக்கையில் தேவையும்படுகின்றன.

அரசாங்கத்தால் அவற்றை இறக்குமதி செய்து தர முடியாவிட்டால் – அதற்கான அந்நிய செலாவணியை ஒதுக்கீடு செய்ய இயலாவிட்டால் – அதைப் பகிரங்கமாக அறிவிக்க வேண்டும். இலங்கையர்கள் பிரதேச ரீதியாக, நகரங்கள், கிராமங்கள் ரீதியாக வெளிநாட்டில் உள்ள நமது தரப்புகளிடமிருந்து அன்பளிப்பாக – வெகுமதியாக – கூட அவற்றைப் பெறமுடியும்.

வடக்கு – கிழக்கில் உள்ள மாணவர்களுக்குத் தேவையான இக்கருவிகளை புலம்பெயர் தமிழர்களின் உதவியாகப் பெற்றுக் கொள்ள முடியும்.

அதேபோல ஜப்பான் போன்ற நாடுகளில் பெரும் எண்ணிக்கையில் உள்ள புலம்பெயர் சிங்களவர்கள் தத்தம் பகுதிக்கான தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியும்.

இவ்வாறு வெளிநாட்டு உதவி, அன்பளிப்பாக இவற்றைப் பெறுவதற்கு அந்நிய செலாவணி தேவையில்லை. அரசின் ஒத்துழைப்பும், இது தொடர்பில் அரசின் கொள்கை விளக்கத் தெளிவுபடுத்தலும் மிக முக்கியமானவை.

என்ன செய்யப் போகின்றது அரசு? தொடர்ந்தும் காலத்தை வீணாக்கி, மாணவர் கல்வியை பாழ்படுத்தப் போகின்றதா? அல்லது உண்மை நிலைவரத்தை ஒப்புக் கொண்டு சர்வதேச மட்டத்திலான உதவியைக் கோரப் போகின்றதா?

# பிரச்சினை இருப்பதாலேயே மக்கள் வீதியில் இறங்கினர்

### முருந்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவிப்பு



பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நாடுதழுவிய ரீதியில் பொது மக்கள் முன்னெடுத்துள்ள போராட்டத்தை பொலிஸார் பலவந்தமான முறையில் அடக்குவது ஜனநாயகத்திற்கு முற்றிலும் விரோதமானது.

பொது மக்களின் கோரிக்கை தொடர்பாக அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும். பிரச்சினை இருப்பதாலேயே மக்கள் வீதிக்கிறங்கியுள்ளார்கள் என அபயராம விகாரையின் விகாராதிபதி முருந்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்தார்.

அபயராம விகாரையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

கொவிட் – 19 வைரஸ் தாக்கத்தை கருத்திற் கொண்டு போராட்டம், ஒன்று கூடல் ஆகியவற்றுக்கு மறு அறிவித்தல் விடுக்கும் வகையில் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பொது மக்கள் சமூக இடைவெளியை பின்பற்றி போராட்டத்தில் ஈடுபட்டாலும் பொலிஸார் அதனைக் கலவரமாக மாற்றி விடுகிறார்கள். போராட்டக்காரர்களுக்கும், பொலிஸாருக்கும் இடையிலான முரண்பாடுகள் பாரிய விளைவுகளை ஏற்படுத்தும்.

போராட்டத்தில் ஈடுபடுபவர்களை பொலிஸார் பலவந்தமான முறையில் அடக்குவது ஜனநாயக கொள்கைக்கு முற்றிலும் விரோதமானது. நாட்டின் ஊடகத்துறை மற்றும் ஜனநாயக உரிமை தொடர்பாக சர்வதேஷம் கூர்மையாக அவதானித்துள்ள வேளையில் இவ்வாறான செயற்பாடுகளும் இடம்பெறுகின்றமை நாட்டை மேலும் பலவீனப்படுத்தும்.

ஜனநாயகக் கொள்கைக்கு முரணான செயற்பாடுகளில் ஈடுபடுவதை அரசாங்கமும், பொலிஸாரும் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

வீதிக்கிறங்கிப் போராடும் மக்களின் போராட்டம் தொடர்பாக அரசாங்கம் அதிக கவனம் செலுத்த வேண்டும். பொருளாதார ரீதியில் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் உரிமை நாட்டு மக்களுக்கு உண்டு. பிரச்சினை உள்ள காரணத்தாலேயே மக்கள் வீதிக்கிறங்கிப் போராடுகிறார்கள். – என்றார்.

# மக்கள் அரசாங்கம் விரைவில் உருவாகும்

### மனோ ஆரூடம்



ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான, ஸ்ரீலங்கா மக்களின் அரசாங்கம் விரைவில் உருவாகுமென, அந்தக் கட்சியின் நடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

உரிமைகளை பாதுகாக்கின்ற அனைத்து மக்களுக்குமான ஜனநாயகமிக்க அரசாங்கம் விரைவில் உருவாகுமென்பதை உறுதியாக வலியுறுத்துவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

'ஜனநாயகத்தைப் பாதுகாப்போம் – மனித சுதந்திரத்தைப் பாதுகாத்திடு' எனும் தொனிப்பொருளில் கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் அமைதி ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது.

ஸ்ரீலங்கா எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. ஐக்கிய மக்கள் சக்தி, சிவில் சமூக அமைப்புகள், ஐக்கிய இளைஞர் சக்தி, மற்றும் ஐக்கிய மகளிர் சக்தி என்பன ஒன்றிணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தன.

இதில் பங்கேற்று கருத்து வெளியிடுகையில் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

# இலங்கைத் தமிழ்ப்பெண் சுவிஸில் ரயில் முன் பாய்ந்து தற்கொலை

சுவிட்ஸர்லாந்து – சூரிச் மாநிலத்தில் வசித்து வந்த இலங்கையைச் சேர்ந்த பெண் ஒருவர் கடந்த திங்கட்கிழமை ரயில் முன் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

50 வயதுடைய, இரண்டு பிள்ளைகளின் தாய் ஒருவரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டுள்ளார் எனத் தெரியவருகின்றது.

இவர் யாழ்ப்பாணத்தை பூர்வீகமாகக் கொண்டவர் எனவும் இவருக்கு 20 வயதுக்கு மேற்பட்ட இரு பிள்ளைகள் இருக்கின்றனர் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டு நல்லடக்கம் செய்யப்பட்டுள்ள நிலையில் அவரது குடும்பத்தினருக்கு இது பெரிய சோக நிகழ்வாக பதிவாகியிருக்கின்றது.

# பொலிஸார் நடவடிக்கை அராஜகத்தின் உச்சமே!



நாமல் கடும் சீற்றம்

ஆர்ப்பாட்டக்காரர்கள் தொடர்பில் பொலிஸாரின் நடவடிக்கை ஏற்புடையதல்ல என விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பெருந்தொற்று நோய் ஏற்பட்டுள்ள நிலையில் ஆர்ப்பாட்டக்காரர்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டுமெனவும், பொலிஸாரின் செயற்பாடுகள் குறித்தும் தாம் தொடர்ச்சியாக விமர்சனங்களை முன்வைத்து வருகிறார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

போராட்டங்களை நடத்துவதற்கு மக்களுக்கு உரிமையுண்டு, எனினும் உலகம் முழுவதிலும் பெருந்தொற்று நிலைமை ஏற்பட்டுள்ள நிலையில் போராட்டக்காரர்களும் பொறுப்புணர்ச்சியுடன் செயற்பட வேண்டியது அவசியமானது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த காலங்களில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ போராட்டத்தில் ஈடுபட்டார் எனவும் அப்போது அவருக்கு கொவிட் தொற்று ஏற்பட்டது எனவும் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இவ்வாறான சவால்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எஸ்.டி. சிவநாயகம்
நினைவுப் பகிர்வு

# தமிழ் ஊடகத்துறையின் ஜாம்பவான் எஸ்.டி.எஸ்.!

ந.வித்தியாதரன்

அங்கம் 10

கொழும்பில் 'தினபதி', 'சிந்தாமணி' பத்திரிகைகளில் நான் பணி செய்த காலத்தில் Freelance Reporter ஆக வேலை செய்வோரின் சம்பளம், பிரசுரமாகும் செய்தியின் ஒரு வரிக்கு பதினைந்து சதம் என்று குறிப்பிட்டிருந்தேன். அது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

அப்படி எழுதி மாதம் 2 ஆயிரம் ரூபாவுக்குக் குறையாமல் வேதனம் பெறுவது என்பது அந்தக் காலத்தில் – 1980 இல் பெரிய விடயம். விளையாட்டுத் துறைச் செய்திகள், நீதிமன்றச் செய்திகளை சளைக்காது எழுதி நான் உழைத்தேன்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழான தமிழ் இளைஞர்களின் வழக்கு விசாரணையைத் தொடர்ந்து செய்தியாக்கி எழுதுவதில் சில வசதிகள் இருந்தன.

செய்தியின் இரண்டாவது, மூன்றாவது பந்தியில் *"நேற்று 34 ஆவது நாளாக கொழும்பு பம்பலப்பிட்டி குயின்ஸ் கிளப் கட்டடத்தில் உள்ள கொழும்பு விசேட மேல் நீதிமன்றத்தில் கான்ஸ்டபிள் சிவநேசன் கொலை வழக்கு நீதிபதி டியூடர் டி அல்விஸ் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது"* என்று தொடங்கி எதிரிகளின் பெயர் விவரங்கள், குற்றச்சாட்டுகள் போன்றவை ஐந்தாறு பந்திகளுக்கு ஓடும்.

*"முதலாம் எதிரியான குட்டிமணி என அழைக்கப்படும் செல்வராசா யோகச் சந்திரன், இரண்டாம் எதிரியான ஜெகன் என அழைக்கப்படும் கணேசநாதன் ஜெகநாதன்.."* என்று ஆரம்பித்து எதிரிகளின் பட்டியல் ஒரு பந்தியாக அமையும்.

அதன் பின்னர் வழக்கு விசாரணைச் செய்தி, முடிவில் ஒவ்வொரு எதிரி சார்பிலும் நீதிமன்றில் பெயர் பதியப்பட்ட சட்டத்தரணிகள் பட்டியலும், அரசுத் தரப்பில் பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் மற்றும் அவருக்கு உதவியாகப் பிரசன்னமாகும் சட்டத்தரணிகளின் பட்டியலும் இடம் பெறும்.

வழக்கின் விசாரணை பற்றிய விடயங்கள், செய்திகள், விவரங்கள் மாறினாலும், இத்தனையாம் நாள் விசாரணை என்ற நாளின் எண்ணிக்கையைத் தவிர, மேலே நான் குறிப்பிட்ட விடயங்கள் மாறவே மாறா. தினபதியின் அந்த வழக்குச் செய்திகளில் தினசரி இவையும் மாறாமல் இடம்பெறும். அவற்றுக்கும் சேர்த்துத்தான் தினசரி வரிக் கணக்கு.

அதனால் *"வித்தி வழக்கு விசாரணைக்குச் செய்தி சேகரிக்கப் போக முன்னரே, சம்பளப் பட்டியலில் கணக்கு ஏறி விடும்"* என்று என் றிப்போர்ட்டர் மேசை சகபாடிகள் பொருமுவதுண்டு. அதுவும் எனக்குத் தெரியும்.



தமிழகத்தின் புகழ்பெற்ற வி.ஜி.பி. நிறுவன சகோதரர்களில் ஒருவரான வி.ஜி.பி. பன்னீர்தாஸுடன் சிவநாயகம் ஐயா குடும்பம்.

இந்த வழக்குகளைத் தொடராக நான் எழுதியமை எனக்கு பல வாய்ப்புகளைத் தந்தன. கொழும்பில் சொந்தக் காலில் நிற்கக் கூடிய வசதி கிட்டியது. என் எழுத்துக்கு என்று வாசகர் வட்டத்தை உருவாக்க முடிந்தது. சட்டத்தரணிகள் மத்தியில் குறிப்பாக – தமிழ் சட்டத்தரணிகள், அரசியல்வாதிகள் மத்தியில் – இளம் வயதிலேயே ஒரு பெயரை நிலைநிறுத்த முடிந்தது. கொஞ்சமேனும் ஆங்கில மற்றும் சட்ட அறிவை பெற வாய்ப்பும் ஏற்பட்டது. சட்டக் கல்லூரி அனுமதிப் பரீட்சையில் சுலபமாக சித்தி பெறவும், சட்டக் கல்லூரி விரிவுரைகளுக்கு ஒழுங்காகப் போகாமல் 'விசிட்டிங் ஸ்ருடன்ட்' என்ற நையாண்டிக்கு மத்தியிலும் முதலாமாண்டு, இரண்டாமாண்டுப் பரீட்சைகளில் சித்திபெறவும் எனக்கு வாய்ப்புக் கிட்டியது.

இவை எல்லாம் தாண்டி ஒரு வசதி கிட்டியது. அந்த விசேட நீதிமன்றக் கட்டடத்துக்குள் சட்டத்தரணிகள், நீதிமன்றப் பணியாளர்களைத் தவிர வேறு ஆள்களை



தினபதி
ரூ 1/50
THE MOST INFLUENTIAL TAMIL DAILY IN SRI LANKA
DINAPATHI
NEW MUTHUMEENACHI JEWELLERY
சிவநேசன் கொலை வழக்கில்
தூக்குத் தண்டனை குட்டிமணிக்கும் ஜெகனுக்கும்
கறுப்பன் விடுதலை; எனினும் வேறொரு வழக்கிற்காக மீண்டும் ரிமாண்ட்
சோமண்ணா

39 ஆண்டுகளுக்கு முன்னர் (1982இல்) குட்டிமணிக்கும், ஜெகனுக்கும் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட செய்தி. அத்தத் தலைப்புச் செய்தியில் நிருபர் என்று என் பெயரும் பிரசுரமாகியிருந்தது. குற்றவாளிக் கூண்டிலிருந்து குட்டிமணி விடுத்த அறிவிப்பின் விவரம் பத்திரிகையின் கீழ் பாதியில் பிரசுரமாகியிருந்தது.

– பார்வையாளர்களாகத் தன்னும் – அனுமதிப்பது குறைவு. பாதுகாப்புக் கருதி.

எனினும் தங்கத்துரை போன்ற எதிரிகளின் நெருங்கிய உறவினர்கள் யாரேனும், அவர்களுக்கு எதிரான வழக்குகள் எடுக்கப்படும் போது எப்போதாவது விசாரணைகளைப் பார்க்கும் சாக்கில் தங்கத்துரையைக் காண வந்தால், சட்டத்தரணிகளின் தலையீட்டின் மூலம் அவர்கள் நீதிமன்றுக்குள் அனுமதிக்கப்படுவர். இப்படி ஜெகனின் தந்தையார் கணேசநாதன் அடிக்கடி வருவார். என்னுடனும் உரையாடுவார்.

மற்றப்படி தினசரி நீதிமன்றத்துக்குள் அனுமதிக்கப்படும் வெளியாள்கள் என்றால் நானும், வீரகேசரியின் அப்போதைய நீதிமன்றச் செய்தியாளர் வரதராசாவும்தான் (அவர் இப்போது அமரர்).

நீதிமன்றக் கட்டடத்துக்குள் எதிரிகள் அழைத்து வரப்பட்டால், அவர்கள் அதன் பின் சிறைத்துறை அதிகாரிகளின் காவலில் இருப்பர் என்றும், நீதிமன்றம் கட்டடத்திலிருந்து வெளியேறும் போதுதான் இராணுவத்தினர் அவர்களுடன் சம்பந்தப்பட முடியும் என்றும் நீதிபதி ஓர் உத்தரவை வழங்கியிருந்தார். நீதிமன்ற கட்டடத்துக்குள், வழக்கு நடைபெறாத சமயங்களில் – இடைவேளைகள் மற்றும் மதியபோசன இடைநிறுத்தங்களின் போது – எதிரிகளுடன் தாங்கள் உரையாடுவதில் பாதுகாப்பாக வரும் இராணுவத்தினர் தலையிடுகின்றனர் என்ற சட்டத்தரணிகளின் முறையீட்டை அடுத்து இந்த உத்தரவு.

இதனால், வழக்கு விசாரணை நடைபெறாத சமயங்களில், நீதிமன்ற மண்டபத்துக்குள் கான்ஸ்டபிள் சிவநேசன் கொலை வழக்கிற்காகக் கூட்டி வரப்படும் குட்டிமணி, ஜெகன் மற்றும் பிற பயங்கரவாதத் தடைச் சட்ட வழக்குகளின் எதிரிகளாகக் கொண்டு வரப்படும் தங்கத்துரை போன்ற அனைவருடனும் தாராளமாகப் பேசி பழகும் சந்தர்ப்பம் எனக்கு ஏற்பட்டது. ஆனால் அதுவே பின்னாள்களில் எனக்குச் சிக்கலைத் தேடித் தந்து விடுமோ என்ற நெருக்கடி உருவாகக் காரணமாயிற்று.

குட்டிமணி, ஜெகன் போன்றோர் தமிழ்ப் பத்திரிகைகளை தினசரி வாசித்து விடயங்களை அறிவதில் ஆர்வமாக இருந்தனர். ஆனால் அவர்களின் கைகளில் நாங்கள் பத்திரிகைகளைக் கொடுக்க முடியாது.

வழக்கு விசாரணை நடைபெறாத சமயங்களில் பெரும்பாலும் காலையில் விசாரணைக்கு முன் அல்லது மதிய இடைவேளையின் போது அவர்கள் அமர்ந்திருக்கும் திறந்த கூண்டுக்கு முன்னால் உள்ள கதிரையில் அமர்ந்தவாறு நான் பத்திரிகையை விரித்துப் பிடிப்பேன். எதிரிகளில் ஒருவர் கண்ணைக் கூர்மையாக்கி பத்திரிகையைப் பார்த்து வாசிப்பார். மற்றையவர்கள் செவிமடுப்பர். இந்த நடைமுறையை சிறை அதிகாரிகள் ஏனோ தடுக்க முயலவில்லை.

இந்தச் செயற்பாட்டினால் அந்தக் கைதிகளுக்கும் எனக்குமான நம்பிக்கை, பற்றுதல் அதிகமாகியது. அப்போது குட்டிமணி, தங்கத்துரை போன்றோர் இயக்கத்தின் முக்கிய பொறுப்பில் இருந்தனர். வெளியில் இருந்த தரப்புகள் அதுவரை காலமும் சட்டத்தரணிகள் மூலம் குட்டிமணி, ஜெகன், தங்கத்துரை போன்றோருடன் ஊடாடி வந்த நிலைமையை மாற்றி என் மூலம் கருத்துக்களை – தகவல்களை – பரிமாற எத்தனிக்கத் தொடங்கின. ஆரம்பக் கட்டத்தில் சில தகவல் பரிமாற்றங்களுக்கு உடந்தையானேன் ஆயினும், இது விரைவில் சிக்கலை வேண்டித் தரும் என்பதை நான் புரிந்து கொண்டேன். (உதயனை ஆரம்பிக்க முன்னரே இப்படி பத்திரிகைத் துறையில் கத்தியில் நடக்கும் வேலையை நான் ஆரம்பித்து விட்டேன் என்பதை என் நண்பர்கள் அறிவார்கள்.)

சத்தம் சந்தடியின்றி வந்து எஸ்.டி. எஸ்.சிவநாயகம் ஐயாவிடம் விடயத்தை ஒப்புவித்து கலந்தாலோசித்தேன். சிவசிதம்பரம், கரிகாலன் போன்ற எனக்கு நெருக்கமான சட்டத்தரணிகளுடனும் அவர் கலந்து பேசச் சொன்ன பிறகு ஓர் ஆலோசனையை – வழிகாட்டுதலை – தந்தார்.

இதற்கிடையில் –

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் விசாரணை செய்யப்பட்ட முதல் வழக்கு முடிவுக்கு வந்தது.

இலங்கையின் பயங்கர வாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் ஆகக் கூடிய தண்டனை ஆயுள் தண்டனைதான். ஆனால் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் விசாரிக்கப்பட்ட கான்ஸ்டபிள் சிவநேசன் கொலை வழக்கில் குட்டிமணி, ஜெகன் இருவருக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டது. எப்படி?

இந்த மரணதண்டனை விதிக்கப்பட்ட சமயம், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அறிவிப்பை குட்டிமணி, குற்றவாளிக் கூண்டில் இருந்து விடுத்தார். மரண தண்டனை நிறைவேற்றும் போது தன் கண்களைத் தானமாக எடுக்கும்படியும், எதிர்காலத்தில் மலரும் தமிழீழத்தை அந்தக் கண்கள் மூலம் தான் பார்ப்பார் என்றும் மனதை உருக்கும் ஓர் அறிவிப்பை அவர் மொழிந்தார். அப்படி ஓர் அறிவிப்பை அவர் வெளியிடுவதற்கு எனது சம்பந்தம் முக்கியமாக இருந்தது. அந்த அறிவிப்புக் காரணமாகவே பின்னர் 1983 ஜூலைக் கலவர சமயம் வெலிக்கடைச் சிறையில் அவரை அடித்தே கொன்றொழித்த சிங்களக் காடையர்களான கைதிகள், அப்போது அவரின் இரண்டு கண்களையும் கூடப் பிடுங்கி எறிந்தனர்.

கைதிகளுடனான ஊடாட்டம் தொடர்பில் சிவநாயகம் ஐயா தந்த ஆலோசனை, குட்டி மணிக்கும் ஜெகனுக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டமை எங்ஙனம், குற்றவாளிக் கூண்டிலிருந்தபடி குட்டிமணி விசேட அறிவிப்பை விடுப்பதில் நான் எப்படி முக்கியத்துவம் பெற்றேன் என்ற விடயங்களை அடுத்து வரும் நாள்களில் பார்ப்போம்.

இது, எஸ்.டி.எஸ். ஐயா பற்றிய என் நினைவுப் பகிர்வுத் தொடர்தான். எனினும் ஓர் ஊடகவியலாளனைப் புடம் போட்ட ஐயாவுடன் மற்றைய விடயங்களும் தொடர்புபடுவதால் அவற்றையும் ஆங்காங்கே தொட்டுச் செல்கிறேன். வரலாற்றில் எங்கோ ஓர் இடத்தில் இந்த நினைவுகளும் பதியப்பட வேண்டும் என்பதற்காக சற்று அகலக் கால் பரப்பி என் எழுத்து ஓடுகின்றது. வாசகர்கள் பொறுத்துக் கொள்வார்களாக.

(15 ஆம் பக்கம் பார்க்க...)



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தள மாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங் காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில் மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அங்கம் 62

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**182. நெல்,நெருஞ்சி இரண்டுமே அழிக்கப்பட்டன என்று எதை சொல்கிறீர்கள்?**

நெருஞ்சிச் செடியை தேடி அழித்ததாக நான் அறிய வில்லை. காலில் தைத்தால் அதைப் பிடுங்கித் தூர எறிந்து விட்டு, அதை பொருட்படுத்தாது போவதுதான் வழமை. நாங்கள் புரிந்து கொள்ளாதது அல்லது புரிந்தும், எம்மிடையே இருந்த மூர்க்கம் அரசியலையோ அதன் சாணக்கியத்தையோ பார்க்காததுதான். இந்தியாவின் ஆதரவில் நாங்கள் கைகோர்த்து நின்றிருந்தால் இவர்களைத் தூக்கி எறிவதில் அவ்வளவு பாதிப்பு இருந்தி ருக்காது. இந்தியாவைப் பகைத்து, ஆதரவு தரக்கூடிய இன்னுமொரு சர்வதேச நாடும் இல்லாமல், மூன்றாம் தரப்புஒன்றின் அனுசரனையோடு பேச்சுவார்த்தைகளுக்கு போகும் போது அவர்கள் நம்பிக்கை வைத்த தமிழர்களின் ஆதரவைப் பேணிப் பாதுகாப்பது சாணக்கியம்.

அதில் நீலன் தமிழ் தளத்திலிருந்து தமிழர்களின் உரிமைகளை பார்த்தவர். இந்திய - இலங்கை ஒப்பந் தத்தில் ஈடுபட்டவர். அவர்களின் நிலைப்பாடு தெரிந்தவர். எல்லாவற்றிற்கும் மேலாக சந்திரிகாவின் நல்லெண் ணத்தைப் பெற்றவர். அவர் மூலமாக பலவற்றைப் பேச்சுவார்த்தைகளில் நகர்த்தியிருக்கலாம். பின்னாள் களில் பேச்சுவார்த்தைகளை முறித்த காரணிகளை பாலசிங்கம் ஆராய்ந்து செவ்விகள் கொடுத்த போது, நீலனை அழித்தது தவறு, அவர் இருந்திருந்தால் சந்தி ரிகா அப்படியான தீர்மானம் எடுத்திருக்க மாட்டார் என்ற சாரப்படக் கருத்துக் கூறினார். அதே போல் கதிர்காமரையும் சாணக்கியத்துடன் கையாண்டிருக்கலாம். தமிழருக்கு ஒரு நீதியான தீர்வு என்பதை அவர் எதிர்த்தவரல்லர். ஆனால் விடுதலைப் புலிகள் இல்லாத பட்சத்தில் தமிழ் ஈழம் என்ற கோரிக்கை அற்றுப் போகும் என்று ஸ்ரீலங் காவின் நிலைப்பாட்டில் பிரஸ்தாபித்தவர். இவை எல் லாவற்றிலும் தூர நோக்கில்லாது, மட்டுமட்டான அரசியல றிவோடு, தங்களை நிலை நிறுத்திக் கொள்ள விடுதலைப் புலிகள் எடுத்த நிலைப்பாடுகள் ஸ்ரீலங்காவிற்கு சர்வதே சத்தில் ஆதரவைப் பெற்றுத் தந்தன.

**183. கதிர்காமரைப் பற்றி எந்தத் தமிழ் மட்டத்திலும் நல்லெண்ணம் இல்லையே?**

இருக்கவில்லை என்பது உண்மைதான். ஆனால் அவர் அதிகாரத்தில் இருந்தார். அவரை அழிப்பதால் நன்மையா, அவரையும் பாவித்தால் நன்மையா என்பது தான் சாணக்கியம். தமிழ் மக்கள் பாரதப் போரின் வியூகங்களையும் குருஷேத்திரத்தையும் அறிந்தவர்கள். அநுரா பண்டா நாயக்க கூட (அப்போது அவர் ஐக்கிய தேசியக்கட்சியில் இருந்தார்) கதிர்காமர் நாடாளுமன் றத்துக்கு வெளியே போனால் - வெள்ளவத்தையில் நின்றால் என்ன, யாழ்ப்பாணம் என்ன, குருநாகல், கண்டி என எங்கு நின்றாலும் ஐந்து வாக்குக் கூட எடுக்க மாட்டார் எனக் கேலி பண்ணினார். சந்தியேந்திரா தனது (Tamil Nation) பத்திரிகையில் சந்திரிகாவின் சேலை யில் தொங்கிக் கொண்டு நிற்கின்றார், சந்திரிகாவின் பாவங்களை சாப்பிடும் ஆன்மா (Sin eater ) என்றும் எழுதினார். ஆயினும் கதிர்காமர் இந்தியா, அமெரிக்கா, ஐரோப்பா என்று எல்லா நாடுகளிலும் நல்ல நட்புறவை வளர்த்து படிப்படியாக எங்கும் விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகளாகப் பட்டியலிட வைத்தார்.

இது விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைகளை முறித்ததில் தொடங்கியது. கூட்டணி அழைக்கப்படக் கூடாது என்ற நிபந்தனைகளில் ஆரம்பமாகியது. ஸ்ரீலங்கா அரசைப் பொறுத்த வரையிலும் விடுதலைப் புலிகள் இல்லாமல் தமிழ் ஈழம் அமைவதற்கு சாத்தியமில்லை என்பதை தெளிவாக கணக்கிட்டிருந்தார்கள். அவர்கள் தன்னிச்சையாக தமிழ் ஈழம் தவிர்ந்த ஒரு தீர்வைக் கூட எந்தவொரு பலவந்தமும் இல்லாமல் தர விரும்பி யிருந்தார்கள். உண்மையில் விடுதலைப் புலிகள் மாத் திரமே தமிழ் ஈழம் என்ற கனவை நனவாக்கலாம் என்ற கனவை வளர்க்கிறார்கள் எனவும் தெரிந்திருந்தார்கள். எப்பொழுது விடுதலைப் புலிகள் இல்லையோ, அரசாங் கத்துக்கு துணைபோகும் கட்சிகள் எல்லாம் ஏனோ தானோ ஆக்கப்பட்டு அரசாங்கம் தமிழ் மக்கள் மேல் முழுமையான அதிகாரங்களை அப்பொழுதுதான் ஏற் படுத்த முடியும் என்று கணக்கிட்டனர். ஆகவே எப்பொழுது புலிகள் பேச்சுவார்த்தைகளால் சில விடயங்களையேனும் பொறுப்பேற்று அதிகாரங்களைப் பெற முன்வரவில் லையொ அப்பொழுது முதல் விடுதலைப் புலிகளை முற்றாக அழிப்பதிலேயே அவர்கள் கவனம் இருந்தது. அது நடந்து விட்டால் தமிழ் ஈழம் செத்துவிடும் என்று திட்டமிட்டனர்.

சிங்கள அரச தளத்திலிருந்து தமிழ் உரிமையைப் பார்த்த கதிர்காமர் பேச்சுவார்த்தைகளை முறிக்கத் தன் கடமையை முன்னெடுக்கவேண்டியிருந்தது. இதே இக்கட்டான நிலையில்தான் நாட்டிலும் புலம் பெயர் தேசங்களிலும் தமிழ் மக்கள் இருந்தார்கள். தமிழ் ஈழத்திற்கான ஆதரவு, புலிகளையும் ஆதரிக்கின்றோம் என்ற நிலைப்பாட்டில் இல்லாவிட்டால் அது நடைமுறை சாத்தியத்திற்குப் பயனில்லாமல் இருந்தது. ஆகவே தமிழர் உரிமைகளை ஆதரித்தோர் தமிழ் ஈழத்தை ஆதரிக்க வேண்டியவர்களானார்கள். அதனால் விடுத லைப் புலிகளையும் ஆதரித்தார்கள். அவர்களின் வீழ்ச்சி யைத் தமிழ் மக்கள் விரும்பவில்லை. அவர்களின் பலத் தில் ஓரளவு குளிர்காய மட்டுமில்லை, பெருமையிலும் இருந்தார்கள்.

ஆனால் திம்பு மகா நாட்டிலிருந்து புரிந்து கொண்ட யதார்த்தத்தில் பாலசிங்கம் தனித் தமிழ் ஈழம் அமை வது சாத்தியமில்லை என்பதைத் தெரிந்து கொண்டார். அந்த அரசியலை பிரபாகரன் விளங்க வேண்டும் என்று பாடுபட்டார். அவரை வெற்றிகளின் அடிப்படையில் பேச்சு வார்த்தைகளுக்கு உட்படுத்தினார். ஆனால் பிரபாகரனோ தான் நினைத்தவற்றால் பிடி கொடாமல் வழிமுறைகள் எடுத்தார். தமிழ் மக்கள் போல பிரபாகரனை பாலசிங்கத்தி னால் கைவிடவும் முடியவில்லை. கருத்து வேற்றுமை கள் வெளிப்பட்டாலும் அவர்கள் உறவு தொடர்ந்து கொண்டிருந்தது.

**184. நோர்வேயினது அனுசரணையில் பேச்சுவார்த் தைகள் தொடர்ந்தனவா?**

2003ஆம், 2004 ஆம் ஆண்டுப் பேச்சுவார்த்தை களிலும் சந்திரிகாவுக்கும் ரணிலுக்கும் இடையே இருந்த பனிப்போரும் முக்கியமாக இருந்தது. அதே சமயம் பாலசிங்கம் – விடுதலைப் புலிகள் இடையேயும் இருந்த பனிப்போரும் தொடர்ந்தது. 6- 9, ஜனவரி 2003 தாய் லாந்திலும், அதைத் தொடர்ந்து ஹாக்கோன் என்ற இடத் தில் ஜப்பானில் 18- 21 மார்ச் 2003 இலும் பேச்சுவார்த் தைகள் தொடர்ந்தன.

இந்தப் பேச்சு தொடரில் மனித உரிமைகளின் மதிப்பு, அவற்றை மீறுவதிலுள்ள பாதிப்புக்கள் பற்றி சுட்டிக்காட் டப்பட்டு, அரச உத்தியோகத்தர்களும் விடுதலைப் புலி களும் ஐ.நா. ஏற்படுத்தும் பயிற்சித் திட்டங்களில் பங்கு பற்ற வேண்டும் என்ற நியதிகள் கொண்டுவரப்பட்டன.

அதைத் தொடர்ந்து ஜூன் 2003 இல் ஜப்பானில் டோக்கியோ நகரில் போரினால் பாதிக்கப்பட்ட நாட்டின் பகுதிகளை மீளக்கட்டமைப்பதற்கான நிதி உதவிகளை ஆராயப் பேச்சுவார்த்தைகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அதற்கு முன்னோடியான ஒரு கூட்டத்தை உதவி தரு வதற்கு முன்வந்த நாடுகளின் பிரதிநிதிகளோடு அமெ ரிக்காவின் வொஷிங்டனில் நடத்துவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டது. இதற்கு விடுதலைப் புலிகளுடன் கலந்தா லோசிக்கப்படவில்லை. அதே சமயம் அவர்களுக்கு அழைப்பும் விடுக்கப்படவில்லை. சொல்லப்பட்ட காரணம் விடுதலைப் புலிகள் அமெரிக்காவில் பயங்கரவாதப் பட்டியல் இருப்பதால் அவர்களுடன் அமெரிக்கா தொடர்பில் இருக்கக்கூடாதென்பதே. இது தங்களை அந்நியப்படுத் தும் சூழ்ச்சி எனக் கணித்து விடுதலைப் புலிகள் ஜூன் 2009 இல் நடந்த பேச்சு வார்த்தைகளைப் புறக்க ணித்தார்கள்.



டோக்கியோ உதவி வழங்கும் நாடுகள் கூட்டத்தின் முடிவில் பிரதமர் ரணிலுடன் ஜப்பானின் யசூஷி அகாஷியும் அமெரிக்காவின் ஆர்மிடேஜும். பிரதமருக்குப் பின்னால் சட்ட மா அதிபர் கமலசபேசன்.

**185. ஜப்பானில் நடந் தது என்ன?**

அங்கு நடந்த கூட்டத்தில் 51 நாடுகளும் 22 சர்வதேச நிறுவனங்களும் பங்குபற் றின. அதில் புலிகள் பங்கு பற்றவில்லை. இது டோக்கி யோவில் ஜூன் 2003இல் நடந்தது. அதில் 54.5 பில்லி யன் டொலர்கள் (அப்போ தைய நிலையில் சுமார் 45 ஆயிரம் கோடி ரூபா) இலங் கையின் மீள்கட்டுமானத்துக்காக உதவியாக தருவதற்கு ஒத்துக் கொள்ளப்பட்டது. அங்கு பல தீர்மானங்கள் விடுதலைப் புலிகளின் பங்குபற்றுதல் இல்லாமலே மேற்கொள்ளப்பட்டன.

அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் தொடர்ந்தும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வட - கிழக்கின் மீள் கட்டமைப்புக்களுக்கு தேவையான நடவடிக்கைகளால் நாட்டின் எல்லா மக்களும் பயன்பெற வழிவகைகள் தேட வேண்டும் என்பது ஒரு தீர்மானம்.

அடுத்து அரசாங்கம் வட – கிழக்குக்கு என ஒதுக்கப்பட்ட நிதிகளை அப்பகுதிகளுக்கே பாவித்து அதன் மூலம் மிக விரைவாக, ஒரு நீதியான அரசியல் தீர்வினை ஏற்படுத்த வேண்டும் என்பது. விடுதலைப் புலிகளின் பேச்சுவார்த் தைகள் தொடர வேண்டும் என்பதும் அந்த அடிப்படை யிலேயே வடக்கு- கிழக்குக்கு நிதிகள் ஒதுக்கப்படுகின் றன என்பது தெரியவந்தது.

அதனால் நிதி கொடுக்கும் நாடுகள் தீர்வு நோக்கியதான பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படுவதை உறுதிப் படுத்தி தொடர்ந்து அக்கறையில் இருக்க வேண்டிய மையை அறிவுறுத்தின. அதற்காக வட – கிழக்குக்கு ஒரு நடைமுறை அலுவலகம் ஏற்படுத்தி அதன் மூலம் இந்த நிதிகள் பெறப்படுவதையும், அவை திட்டங்களில் பாவிக் கப்படுவதையும் மேற்பார்வையிட வேண்டும் என்றும், முக்கியமாக ஒரு தீர்வு ஏற்படும் வரை இந்த யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்கள் தரப்பட வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

அதே சமயம் மனித உரிமை வளங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற ஐ.நா. அறிவுறுத்தல்களின் படி வயது குறைந்தோரின் ஆட்சேர்ப்பு நிறுத்தப்பட வேண்டும். முதன்மைப் போராளிகளை சமுதாயத்தில் மீள் சேர்க்கும் பணிகளுக்கான திட்டங்கள், விடுதலைப் புலிகளும் அர சாங்கப் படைகளும் ஒரு ஒருங்கிணைந்த திட்டத்தில் படைகளை வாபஸ் பெறப்பட்டு, ஆயுதங்கள் களையப் பட்டு, இராணுவ முனைப்புக்கள் அடக்கப்பட்ட சாதாரண நிலைக்கு வர வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டன.

அதே சமயம் இவை நடைபெறும் போது ஆயுதம் தாங்கியோரின் அதிகாரங்கள் குறைந்து, மக்களும் சிவில் மன்றங்களின் பங்களிப்புடன் முக்கியமாக வளர வேண்டும் என்றும், அந்தப் பங்களிப்பின் பக்குவங்களை நிதி தரும் நாடுகள் மேற்பார்வையிட்டு அவற்றின் அடிப் படையில் மேல் நிதிகள் வழங்கப்படும் என்றும் தீர்மா னித்தன.

இவை எல்லாம் நிதி தந்த நாடுகளின் நல்ல எண் ணங்களானாலும், விடுதலைப் புலிகள் இவை தங்களைக் கலந்து கொள்ளாமலும் தாங்கள் பங்குபற்றுதல் இல்லா மலும் இந்த நாடுகள் ஒருதலைப்பட்சமாக இந்தத் தீர் மானங்களை எடுத்துள்ளார்கள் என அறிவித்தார்கள்.

(வளரும்....)



# வாழ்க்கையெனும் விளையாட்டை சிறப்பாய் கையாளுங்கள்

வாழ்க்கை எனும் விளையாட்டு வெகு சிலரால் மட்டுமே சிறப்பாக கையாளப்படுகிறது. பெரும்பாலானோருக்கு வாழ்க்கை சுமையாகி அழுத்தம் தருகிறது. வாழ்க்கையெனும் விளையாட்டை சிறப்பாய் கையாளுங்கள்.

வாழ்க்கை என்பதும் ஒரு விளையாட்டுதான். ஒரு விளையாட்டின் போக்கை நீங்கள்தான் நிர்ணயிக்கிறீர்கள் என்றால், அந்த விளையாட்டை நீங்கள் எப்படி வேண்டுமானாலும் விளையாடலாம். விளையாட்டின் போக்கை நீங்கள்தான் நிர்ணயிக்கிறீர்கள் என்றால், நிச்சயமாக இனிமையைத்தானே உங்களுக்கு நீங்கள் உருவாக்கிக் கொள்வீர்கள்? அப்படி நீங்கள் மிகவும் இனிமையான உணர்வில் இருக்கும்போது நீங்கள் மிக அற்புதமான மனிதராக இருப்பீர்கள், இல்லையா? ஆனால், இதுவே நீங்கள் மிகவும் இனிமையற்று இருக்கிறீர்கள் என்றால், அதாவது கோபத்திலோ, இயலாமையிலோ, மன உளைச்சலிலோ இருக்கும்போது, நீங்கள் மிக மோசமான மனிதராக நடந்து கொள்வீர்கள், இல்லையா?

அதனால் இவ்வுலகிற்கு நீங்கள் வழங்கக் கூடிய சிறந்த இன்ஸ்யூரன்ஸ், உங்களைச் சுற்றி இருப்பவர்களுக்கு நீங்கள் செய்யக்கூடிய மாபெரும் விடயம், நீங்கள் இனிமையான உணர்வில் இருப்பதுதான். அதாவது நீங்கள் ஆனந்தமான மனிதராக ஆவதுதான். ஆனந்தமாக இருக்கும்போது, 'நல்லவனாய் இரு' என்பது போன்ற முட்டாள்தனமான யோசனைகளை உங்களுக்கு யாரும் சொல்லிக் கொடுக்கத் தேவையில்லை. நீங்கள் அப்படித்தான் இருப்பீர்கள். உங்களுக்குள் நீங்கள் எப்படியோ துயரத்தில் ஆழ்வதால்தான், 'அன்பாய் இரு. எல்லோருக்கும் நல்லதையே செய்' என்று யாரேனும் உங்களுக்கு சொல்லிக் கொண்டேயிருக்கிறார்கள்.

மகிழ்ச்சியாக இருக்கும்போது, நீங்கள் எவ்வளவு பெருந்தன்மையோடு நடந்துகொள்கிறீர்கள், இல்லையா? நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கும்போது, எது நடந்தாலும் அதை அனுசரித்துப் போகக்கூடியவராக, மென்மையானவராக, பெருந்தன்மையோடு நடந்து கொள்பவராக இருப்பதை கவனித்திருக்கிறீர்களா? இதுவே நீங்கள் துயரமாக இருந்தால், அதிகமான எரிச்சல், கோபம், ஆத்திரம் போன்ற உணர்வுகளுடன் நடந்து கொள்கிறீர்கள் என்பதையும் கவனித்திருக்கிறீர்கள்தானே? இது ஒவ்வொரு மனிதனுக்கும் உண்மை.

தொகுப்பு -
ப்ரியமதா பயஸ்-



# உறவின் தித்திப்பு நிலைத்திட இதோ சில ஆலோசனைகள்



பருவகாலத்தை எட்டினாலே பலருக்கும் கண்களில் கல்யாணக் கனவுகள் மின்னிடும். ஆசை ஆசையாய் காத்திருந்து திருமணம் செய்தாலோ, திருமணம் முடிந்த மூன்றே மாதங்களில் அந்த உறவு கசந்து போகிறது. அவ்வாறு முறிந்து போகாமல் இந்த உறவின் தித்திப்பு நிலைத்திட, இதோ சில ஆலோசனைகள்–

காதல் வயப்படுவதை, ஆங்கிலத்தில் 'ஃபாலிங் இன் லவ்' என்பார்கள், 'காதலில் விழுகிறேன்' என்று பொருள்படும். இது ஒரு அற்புதமான வெளிப்பாடு. ஏனெனில், காதலில் நீங்கள் உயர்வதில்லை, பறப்பதில்லை, நடப்பதில்லை, நிற்பதும் இல்லை. காதலில் விழ மட்டுமே முடியும். காரணம், அப்போது 'நான்' என்ற உங்கள் அகங்காரத்தில் இருந்து ஏதோ ஒன்று உடைய வேண்டும். அதாவது, உங்களை விட வேறொருவர் உங்களுக்கு அப்போது முக்கியமாகிப் போகிறார். உங்களைப் பற்றிய சிந்தனையிலேயே ஆழ்ந்திராமல் இருந்தால் மட்டுமே, உங்களால் இன்னொருவரை காதலிக்க முடியும். 'நான்' என்ற எண்ணம் விழுந்தால்தான், அங்கு காதல் என்ற உன்னதமான ஒன்று மலர முடியும்.

ஒருவருடன் எந்த அளவிற்கு நெருக்கமான உறவு வைத்துக் கொள்ள நீங்கள் விரும்புகிறீர்களோ, அந்த அளவிற்கு அவரை புரிந்துகொள்ளவும் நீங்கள் முயற்சி செய்ய வேண்டும். அவரை நன்றாக புரிந்துகொள்ளும் போதுதான் அவர் உங்களுக்கு இன்னும் நெருக்கமான, அன்பான உறவாக ஆகிறார். அவர் உங்களை நன்றாக புரிந்து கொண்டிருந்தால், இந்த உறவின் அழகை, நெருக்கத்தின் ஆனந்தத்தை அவர் உணர்வார். இதுவே நீங்கள் அவரை நன்றாக புரிந்து வைத்திருந்தால், நீங்கள் அந்த நெருக்கத்தின் இன்பத்தை உணர்வீர்கள். உங்கள் துணைவரின் தேவைகளை, தடைகளை, திறன்களை அறிய முயற்சி செய்யாமல், அவர் உங்களைப் புரிந்து கொண்டு நீங்கள் விரும்புவது போலவே எப்போதும் நடக்கவேண்டும் என்று எதிர்பார்த்தால், பின் பிரச்சினைகள் மட்டும்தான் மிஞ்சும்.

ஒவ்வொருவரிலும் நல்லதும் இருக்கும், கெட்டதும் இருக்கும். இதைப் புரிந்து கொண்டு அரவணைத்தால், அந்த உறவை உங்களுக்கு வேண்டியது போல் நீங்கள் உருவாக்கிக் கொள்ளலாம். 'இல்லை அவருக்குப் புரிந்ததுபோல் செயல்படட்டும்' என்று விட்டுவிட்டால், நடப்பவை அவ்வப்போது தற்செயலாக மட்டும்தான் உங்களுக்கு வேண்டிய வகையில் நடக்கும். உங்கள் துணைவர் பெருந்தன்மையோடு இருந்தால், உங்களுக்கு எல்லாம் சாதகமாக இருக்கும். இல்லையென்றால், அந்த உறவு முறிந்துபோகும். இதற்கு அர்த்தம், உங்கள் துணைவருக்குப் புரிந்து கொள்ளும் திறன் அறவே இல்லை என்பதல்ல. ஆனால் அவர் உங்களை நன்றாக புரிந்துகொள்வதற்கு ஏற்ற சூழ்நிலைகளை உங்களின் 'புரிதலை'க் கொண்டு நீங்கள் உருவாக்க முயற்சி செய்யலாமே.

ஒருமுறை கல்யாணம் செய்தால், அவ்வளவுதான் அதற்குமேல் வேறெதுவும் தேவையில்லை என்று மறந்து போகும் விடயமல்ல இது. அன்றாடம் உயிர்ப்போடு நிகழவேண்டிய கூட்டு முயற்சி இது. தனித்தனி நபர்களாக இருக்கும் இருவர், சேர்ந்துவாழ முடிவுசெய்து, இருவருக்குமாய் ஒரு வாழ்வை உருவாக்கி, அதில் சந்தோஷமாக வாழ்ந்து நல்வாழ்வை உருவாக்கிக்கொள்வது. இப்படி இருவர் சேர்ந்து தங்கள் வாழ்வை ஒன்றாக பிணைத்துக்கொள்வதே தனிஅழகு.

நம் கலாசாரத்தில், தங்கள் வாழ்வை இருவர் இணைத்துக் கொண்டதற்கான காரணத்தை அவர்களுக்கு நினைவூட்டும் விதமாக, திருமண பந்தத்தை வருடா வருடம் புதுப்பித்துக்கொள்வார்கள். 'அந்தநாள்' மீண்டும் புதிதாய் திருமணம் நிகழ்ந்ததாக கொள்ளப்படும். இல்லையென்றால் காலத்திற்கும் அதில் சிக்கிக் கொண்டுவிட்டது போன்ற உணர்வு வந்துவிடும். இது அப்படியல்ல இது தெரியாமல் சிக்கிக் கொண்டுவிட்ட உறவல்ல விழிப்புணர்வோடு நீங்கள் ஏற்படுத்திக்கொண்டது, அதை அவ்வாறே விழிப்புணர்வோடு நடத்திக் கொள்ளுங்கள்.

உண்மையிலேயே அழகான உறவுகள் மலரவேண்டும் என்றால், அடுத்தவரை நோக்கும் முன், ஒரு மனிதன் முதலில் உள்முகமாய்த் திரும்பி தன்னைத் தானே ஆழமாய் அறிந்துகொள்வது அவசியம். நீங்கள் சந்தோஷ ஊற்றாக மாறி, அதை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்பியே உறவுகளை ஏற்படுத்திக் கொள்கிறீர்கள் என்றால், எப்படிப்பட்டவருடனும் உங்களுக்கு அற்புதமான உறவு உருவாகிடும். உங்கள் சந்தோஷத்தை பகிர்ந்து கொள்வதற்குத்தான் செல்கிறீர்கள் என்றால், இவ்வுலகில் யாருக்கேனும் உங்களுடன் பிரச்சினை உண்டாகுமா என்ன? நிச்சயம் இல்லை. இன்னொரு மனிதருடன் சேர்ந்து வாழ்வதன் ஆழமான உணர்வை, உன்னதத்தை நீங்கள் உணர வேண்டுமென்றால், அந்த உறவு உங்களைப் பற்றியதாக இருக்கக் கூடாது அது எப்போதும் உங்கள் துணைவரைப் பற்றியதாகவே இருக்க வேண்டும். நீங்கள் இருவருமே இவ்விதமாக எண்ணினால் அப்போது கல்யாணம் என்பது ஒரு 'அமைப்பு' என்பதைத்தாண்டி, அது ஒரு சங்கமமாய் உருவெடுக்கும்.

உங்கள் சுகம், சவுகர்யம், சந்தோஷம் என எல்லாவற்றிற்குமான ஆதாரமாக உங்கள் துணைவரை நியமித்து, உங்கள் சொர்க்கத்தை உருவாக்க அவரை எப்படியெல்லாம் பயன்படுத்தலாம் என்ற கணக்கோடு நீங்கள் திருமணம் செய்திருந்தால், உங்களுக்கு ஏமாற்றம் தான் மிஞ்சும். 'திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகிறது' என்பார்கள் காரணம் பலரும் தங்கள் திருமணத்தை நரகமாக மாற்றிக் கொண்டுவிட்டார்கள் அடுத்தவரிடம் இருந்து 'எதை, எப்படிப் பெறலாம் என்ற கணக்கின் அடிப்படையில் உங்கள் உறவை உருவாக்கி இருந்தால், அதை எவ்வளவு நுணுக்கமாக நீங்கள் கையாண்டாலும், உழைச்சலும் பிரச்சினையும் தொடர்ந்து இருந்து கொண்டுதான் இருக்கும். ஆனால் உங்கள் உறவை அடுத்தவருக்கு அர்ப்பணமாக நீங்கள் உருவாக்கினால், எல்லாம் அற்புதமாக இருக்கும்.

காலைக்கதிர்
Kalaikkathir

We already know, that forces can make objects move, accelerate or decelerate. Another effect of force is is to change shape. Sometimes, the change of shape is temporary such as a spring. Temporary change of shape can absorb and store energy. Instead, a permanent change of shape could occur, for example the destruction of a building.

# Temporary Change of Shape



**Elastic Materials**

All elastic materials will stretch under tension and shorten when compressed. Elastic Materials do not break easily and usually return to their original position, after a change of shape.



**Glass-like Materials**

Materials like glass, are brittle so they break at force and do not change shape easily.



**Clay-like Materials**


Materials like clay can change shape, even for the simplest of touch.



**Springs**

A spring is a coiled length of a certain type of metal, which can be stretched & squashed by applying a force. Springs can be used for many things, such as in beds, to make sleeping comfortable & in doors, for them to close automatically. By experimenting with springs, you can learn " Springs change length when a force acts on them and they return to their original length, when the force is removed." This might seem obvious to you, but it was thanks to experiments that we found out about this quality.


## The Hooke s Law



**Robert Hooke**
Scientist

When i was carrying out an experiment with springs, I noticed something. I investigated by measuring the extension in length on a spring, when load forces are added. I drew my results on a graph, and the straight line passed through the origin! I realised that the extension of the spring is proportional to the force added! Just remember, if you stretch the spring too much, my law does not apply and although it applies for springs and wires, it does not apply to elastic bands.

## FORCE, MASS & ACCELERATION



An object does not change velocity (accelerate or decelerate), if there is no unbalanced force. So a car will move at constant speed if the force of the engine and the friction is the same.



An unbalanced force will cause the object to change in velocity, so to accelerate or decelerate. Whether it accelerate or decelerates depends on the direction & size of the unbalanced force.



$F = ma$

Force is measured in Newtons (N). Mass is measured in kilograms (kg). Acceleration is measured in m/s2.

### FRICTION & BRAKING

The grooved pattern on a car tyre is known as the 'tread' of the tyre. It is there so that the rubber surface is always in contact with the road by throwing away the water.

I'm pretty sure, you know by now, that brakes work by increasing friction between the tyre and the road.

Most mordern cars are fixed with an Anti-Lock Braking (ABS) so that the chance of skidding is reduced. ABS is a computer-controlled system that senses when the car is about to skid and releases the brakes for a short time.

### SAFE-STOPPING DISTANCE

The stopping distance of a vehicle is the sum of the thinking distance and the braking distance. The faster the car, greater the stopping distance.

#### THINKING DISTANCE

If your driving down the road, and you suddenly see a man blocking your way, it'll take time for you to respond to this sudden change. This is the reaction time and depends on who is driving. There are a number of other factors that affect the thinking distance too. This includes poor visibility (eg:- fog) and higher speed.


#### BRAKING DISTANCE

With ABS, you can brake as hard as you can, in the event of an emergency. Vehicles with a large mass take more time to slow down due to the equation (f=ma) mentioned above.


Preyan Anuraj
Grade 10
Gateway College
www.precoolskillz.com

## Terminal Velocity


Terminal velocity is when the drag force and the weight of an object falling through the air is equal. It is still falling but not accelerating.



As soon as the object is dropped, it's velocity is 0 m/s. This means that it's drag force is zero. The only force acting on it is weight, which is why it is ac ce lerating towards earth.



The object is now falling, it has gained velo city. With increasing velocity, the drag force will increase too. Right now the object is accelerating since the wei ght force is more than the drag. You can calculate the total downward force by Weight Drag.



Now, the velocity has increased and the drag force has increased enough to equalise the weight. There is no unbalanced force so no acceleration. This is called the terminal velocity.

**Parachutes**

When you jump out a plane, you'll accelerate all the way until you reach your terminal velocity. When you pull out your parachute, there will be an increase in drag force, which will cause you to move upwards until you decelerate downwards slowly.

## Can you guess the answers to this riddles?




01. What has to be broken before you can use it?
02. I'm tall when I'm young and I'm short when I'm old. what am I?
03. What goes up but never comes down?
04. I have branches, but no fruits, trunk or leaves. what am I?
05. It belongs to you, but your friends use it more. what is it?
06. Kate's mother has three children Snap, Crackle and ............?
07. If you don't keep me, I'll break. What am I ?
08. What starts with a 'P', ends with an 'E' and had thousands of letters?
09. What are two things people never eat before breakfast ?
10. What has four legs and only one foot?

**Answers.**
1. An egg
2. A candle
3. Age.
4. A bank.
5. Name.
6. Kate.
7. A promise.
8. Post office
9. Lunch and Dinner.
10. Bed.

**Pukalarasi Rubenthiran.**
**Grade 7**
**Kn/ Pallai Central College.**

# LET'S CHANGE THE TENSES IN REPRORTED SPEECH

(2) PRESENT CONTINUOUS ⏩ PAST CONTINUOUS

EG:
Mala said "I am watching television." ⏩ Mala said that she was watching television.

**The way of writing the reported speech**

- First, we write the subject pronoun (He, She, They, Teacher)
- Then we put reporting verb (said, ordered) and that also.
- Then write the changed pronoun (he, she, them).
- Then write be verb (am, is ⏩ was, are ⏩ were), V1+ing (watching, buying).
- Finally write the object, propositions, etc.
- [NOTE: If, there pronouns are identified in direct speech, we want to change that when we writing the reported speech. (now ⏩ then, ago ⏩ before)]

**EXERCISE;**


**A. Ranjith: "Harshini is coming to the party."**
**B. (To my friend): "I am not joining this tour."**
**C. Kalai: "We are working this hospital."**
**D. Rhia: "The dog is chasing the cow."**
**E. Teacher (to me): "I am waiting for you for 50 minutes in here."**
**F. Latha: "He is watching online classes now."**
**G. Manager: "She is preparing the weekly report."**
**H. Neha: "I am living in Delhi."**
**I. Mother: "I am going to market."**
**J. Our class monitor (to us): "I am speaking very patiently today."**

**ANSWERS;**

**A. Ranjith said that Harshini was coming to the party.**
**B. I said to my friend that I was not joining this tour.**
**C. Kalai said that they were working that hospital.**
**D. Rhia said that the dog was chasing the cow.**
**E. Teacher said to me she was waiting for 50 minutes in there.**
**F. Latha said he was watching online classes then.**
**G. Manager said that she was preparing the weekly report.**
**H. Neha said that she was living in Delhi.**
**I. Mother said that she was going to market.**
**J. Our class monitor said us that he was speaking very patiently that day.**

**Subeedahana Jeyakanth**
**2023 A/L Bio**
**KN/Pallai Central College.**

# Missile man of India



Dr. APJ Abdul Kalam, popularly known as "Missile Man of India" rose to the height of being the first citizen of India, the President of India. He was the architect of India's integrated missile development programme and a recipient of the highest civilian award Bharat Ratna.

Avul Pakir Jainulabdeen Abdul Kalam was born on 15th October, 1931 at Rameswaram in Tamil Nadu. His father was a boat owner and his mother was a housewife. Kalam was youngest of all in his siblings. In his early years of school, Kalam was an average student but a determined and hardworking one.

After completing his schooling from Schwartz Higher Secondary School, he earned a graduation degree in physics from Saint Josephs' College. He moved to Madras in 1955 to study aerospace engineering. In 1960, Kalam joined Aeronautical Development Establishment of the Defence Research and Development Organisation (DRDO). After nine years, in 1969, he was transferred to Indian Space Research Organisation (ISRO) where he directed the creation of India's First Satellite Launch Vehicle (SLV-111) which successfully deployed the 'Rohini' satellite in July 1980.Many projects were headed him such as Rohini, The Project Devil, The Project Valiant and many more.

In 2002, he was selected as the president of India and he served his motherland from 2002 to 2007. From 2007, he served as a visiting lecturer of various universities.

He got many awards such as Bharat Ratna, Padma Bushan, Padma Vibhushan and many more. Abdul Kalam was not only a country server but also a good writer. He wrote many books such as "Ignited Minds","India 2020" etc. With great success in his various endeavours, like directing projects to develop ballistic missiles, creation of polar satellite launching vehicle and advance missile programmes, Kalam was the best known nuclear scientist termed as 'The Missile Man of India'.

**Inthuga Loganathan**
**Grade-10**
**Kn/Pallai Central College**

Learning English by reading newspapers is a good habit. Newspapers are reliable source to expand your English vocabulary. It can also improve your spoken English as you read aloud the articles. We are publishing articles every Sunday to accelerate the English Language skills of school children in this outbreak.
**Articles are welcomed from school children and they can be emailed to kalaikkathiredu@gmail.com**

காலைக்கதிர் Kalaikkathir

# இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

தரம் - 11 | விஞ்ஞானம் | அலகு 04

## அலைகளும் அவற்றின் பயன்களும்

**01)**

a) **அலைகள் ஆனவை பொறிமுறை அலைகள், மின்காந்த அலைகள் என இரண்டு வகையாகக் காணப்படுகின்றன.**

i) பொறிமுறை அலைகள் என்றால் என்ன?
ii) பொறிமுறை அலைகள் எத்தனை வகைப்படும்? அவை எவை?
iii) குறுக்கலை என்றால் என்ன?
iv) நெட்டாங்கு அலையில் துணிக்கைகளின் இயக்கத்தை விளக்குக.
v) குறுக்கலைக்கும் நெட்டாங்கலைக்கும் 02 வேறுபாடு தருக.

b) **அலை என்பது ஒரு புள்ளியிலிருந்து வேறொரு புள்ளிக்கு சக்தி பயணிப்பதைக் காட்டுகின்றது.**

i) ஒரு அலை இயக்கத்தில் பங்குபெறும் துணிக்கையின் இடப்பெயர்ச்சி நேரவரைபை பருமட்டாக வரைக.
ii) நீர் வரைந்த வரைவில் முடி, தாழி, ஆவர்த்தனகாலம், வீச்சம் என்பவற்றினை சரியாகக் குறித்து பெயரிடுக?
iii) இங்கு அலையின் நீளம் என்றால் என்ன? (அலை நீளம் என்றால் என்ன)
iv) ஒரு மின்காந்த அலையின் நீளம் துணிவதற்காக உம்மிடம் ஒரு செயற்றிட்டம் தரப்பட்டுள்ளது. தரையில் அவ் மின்காந்த அலையின் வேகம் $3x10^8$ $ms^{-1}$ உம் மிடிறன் $3x10^{19}$ Hz உம் ஆகும். எனவே அவ் மின்காந்த அலையின் அலை நீளத்தைக் கணிக்குக.
v) மின்காந்த அலையின் இயல்புகள் 3 தருக?


c)

i) காமா கதிர்கள் X கதிர்களுக்கு இடையில் வேறுபாடு 2 தருக.
ii) X கதிர்களின் பயன்பாடு 2 தருக!
iii) கட்புல ஒளியின் மீடிறன் விச்சைத் தருக.
iv) நுண்கலைக் கணனியினுள் கையடக்கத் தொலைபேசியை வைத்து மூடும் போது தொலைபேசியின் தொடர்பு துண்டிக்கப்பட்டதை ஒரு மாணவன் அவதானிக்கிறான். அதற்குரிய காரணம் யாதாக இருக்கும் ?

d)

i) ஒலி அலையானது நெட்டாங்கலையா அல்லது குறுக்கலையா?
ii) ஒரு மாணவன் சூரியப்புயலின் சத்தமானது புவியிலுள்ளவர்களின் காதுகளுக்கு கேட்க வாய்ப்புள்ளது என கருதுகிறான். கூற்றுடன் நீர் இணங்குவீரா காரணம் தருக.
iii) ஒரு மாணவன் ஒரு மலை அடிவாரத்திலிருந்து கத்துகிறான். ஒலியானது அவனது காதை மீண்டும் வந்து அடைய 4 செக்கன் எடுக்கின்றது. மாணவனுக்கும் மலை அடிவாரத்துக்கும் இடையிலான தூரம் யாது? (வளியில் ஒலியின் கதி 330 $ms^{-1}$)
iv) ஒரு ஒலி அலையானது திண்மம், திரவம், வாயு என மூன்று ஊடகங்களினூடாக செலுத்தப்படுகின்றது. அதன் வேகம் பற்றி யாது கூறுவீர்.
v) ஒலியின் சிறப்பியல்புகள் 3 தருக.

**02)** a)





i) இப் பரிசோதனையின் நோக்கத்தினையும் சரியாக நடைபெற்ற இப் பரிசோதனையில் இருந்து நீர் எடுத்த இறுதி முடிவும் யாது?
ii) இப்பரிசோதனையில் A.B.C என்பவற்றைப் பெயரிடுக.
iii) இப்பரிசோதனையை நடத்தும் முறையை விளக்குக.
iv) ஒரு மாணவன் தனது கணிப்பீட்டுப் பரீட்சையில் நான் "இடி சத்தத்தினைக் கேட்டபின்பு மின்னலை கண்ணால் காண்பதாக" கூறுகிறான் .இக் கூற்றுடன் நீர் இணங்குகிறீரா? காரணம் தருக.


b) **ஒரு நீர் மூழ்கிக்கப்பல் ஆனது மேலேவரும் கப்பல்களை இனங்காண்பதற்கு கழி ஒலி அலையை பயன்படுத்துகின்றது.**

i) கழி ஒலியின் பயன்பாடுகள் 2 தருக?
ii) கழி ஒலி அலைகள் மனித காதினால் உணரமுடியுமா? காரணம் தருக.
iii) மேற்காட்டிய ஒலி அலையானது நீர்மூழ்க்கிக் கப்பலிலிருந்து மீண்டும் நீர் மூழ்க்கிக் கப்பலை வந்தடைய 10 செக்கன் ஆகின்றது. நீரில் ஒலியின் வேகம் 1440$ms^{-1}$ ஆகும். எனவே கடல் மட்டத்தில் மேல்வள கடலுக்குக் கீழுள்ள கப்பலுக்கும் இடையிலான தூரம் யாது?
iv) இசைக் கருவிகள் எத்தனை வகைப்படும்? அவை எவை?

c) **காமா கதிருக்கு உரிய அலைவடிவம் கீழே வரைபில் காட்டப்பட்டுள்ளது.**



i) படத்தில் முடி, தாழி என்பவற்றைக் குறித்தும் பெயிடுக.
ii) இங்கு அலை நீளத்திற்கு சமமாக 2 புள்ளிகளை இட்டு அதனை A, B எனப் பெயரிடுக.
iii) கட்புலன் ஒளி, கழி ஊதாக்கதிர், காமாக் கதிர்கள் மீடிறன் ஒழுங்கு வரிசையில் ஏறுவரிசைப்படுத்துக.
iv) மின்காந்தத் திருசியத்தில் அலைகளின் மீடிறனுக்கும் அலை நீளத்துக்குமிடையேயான தொடர்பு யாது?




i) ஒலி அலையின் எச்சிறப்பியல்பு இப்படத்தின் மூலம் காட்டப்பட்டுள்ளது.
ii) கேள்தகு வீச்சு என்றால் என்ன?
iii) மனிதனின் கேள்தகு வீச்சு எல்லை யாது?
iv) எதிரொலி மூலம் வேட்டையாடும் உயிரினங்கள் 2 தருக.

**ஆக்கம் - வி.விநோஜன்**

# இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

தரம் - 10 | விஞ்ஞானம் | அலகு 08

## அங்கிகளின் சிறப்பியல்புகள்

(01) a)

1.கல ஒழுங்கமைப்பு, உறுத்துணர்ச்சியும் இயைவாக்கமும், அசைவு, இனப் பெருக்கம், வளர்ச்சியும் விருத்தியும் (எவையேனும் 3 )
2.கிளாமிடோமோனல் (Chalonydomonus), யூக்கிளினா (Euglena), அமீபா (Amueba), பரமீசியம் (Parameciam), (எவையேனும் 3 )
3.கரு, இறைபோசோம்கள், சவுக்குமுளை.
4.குருதிச் சுற்றோட்டத் தொகுதி
5.கலம் → இழையம் → அங்கம் → அங்கத்தொகுதி **அல்லது**
இதய தசைக்கலம் → இதய தசை இழையம் → இதயம் குருதி → சுற்றோட்டத் தொகுதி

b)

1.அங்கிகளானது உயிர் நிலவுகைக்காக சக்தியையும் பதார்த்தங்களையும் பெற்றுக்கொள்ளும் செயன்முறை போசணை என அழைக்கப்படும்.
2.இரண்டு வகைப்படும்
தற்போசணை, பிற போசணை
3.பச்சைத் தாவரங்கள், பச்சை அல்காக்கள் அல்லது தாவரங்கள், அல்காக்கள்
4.தாவரக் கலங்களில்/ ஒளித் தொகுப்புக் கலங்களில் காணப்படும் பச்சையுருமணிகளில் உள்ள விசேடமான சேதனச் சேர்வையான பச்சையம் அல்லது குளோரபில்லின் உதவியுடன் உணவு உற்பத்தி செய்யப்படும் செயன்முறை.

$$6CO_2 + 6H_2O \xrightarrow[\text{பச்சையம்}]{\text{சூரியஒளி}} C_6H_{12}O_6 + 6O_2$$

5.இரசாயனத் தற்போசணிகள்

c)

1.சுவாசத்தின்போது $CO_2$ வெளிவிடப்படுவதை உறுதிபடுத்துவதற்கான பரிசோதனை.
2.பொற்றாசியம் ஐதரொட்சைட்டு கரைசல் (KOH(aq))
பதிலாக சோடிய ஐதரொட்சைட்டு கரைசலைப் பயன்படுத்தலாம் (NaOH(aq))
3.வெளி வளியிலிருந்து வரும் $CO_2$ வை உறிஞ்சுவதன் மூலம் பரிசோதனையில் ஏற்படும் வழுவைக் குறைக்கும்.
4.சுண்ணாம்பு நீர்க் கரைசல்
5.D எனும் குடுவையில் காணப்படும் தெளிந்த சுண்ணாம்பு நீர்க் கரைசல் பால் நிறமாக மாறும்.

d) 1. A - அளவிடை, B - காட்டி, C - கப்பி, D - இழை, E - சுமை, F - தாவரம், G - தாவரச்சாடி
2.தாவரம் மெதுவாக வளர்ச்சியடைந்தாலும் கப்பியுடன் பொருத்தப்பட்டுள்ள காட்டியினால் பெரிய அளவிடையாக காட்டும்
3.சுவாசத்தின்போது ஒட்சிசன் உள் எடுக்கப்படுகின்றமையை காட்டும் பரிசேதனை.
4.சுவாசத்தின்போது வெளி விடப்படும் $Co_2$ வும் உள் எடுக்கப்படும் $O_2$ ஓர் சமனிலையில் காணப்படுவதே இதற்கு காரணமாகும்.

(02) a)

1.சுற்றாடலில் ஏற்படும் மாற்றங்களிற்கேற்ப தொழிற்படுதல் உறுத்துணர்ச்சி எனப்படும். (புற அகச் சூழலிருந்து வரும் தூண்டலுக்கு துலங்கலை காட்டும் ஆற்றல்)
2.புற, அகச் சூழல்களிலிருந்து பெறப்படும் தூண்டல்களுக்கு துலங்கலைக் காட்டும் ஆற்றல் உறுத்துணர்ச்சி ஆகும். தூண்டலுக்கான துலங்கலைக் காட்டும்போது பல்வேறு அங்கங்களுக்கிடையிலான தொடர்பு இயைபாக்கம் எனப்படும்.
3.நரம்புகள், தசைகள், ஓமோன்கள்
4.இத்தாவர இலைகளானது ஒளிச் செறிவினால் ஏற்பட்ட தூண்டலுக்கு உறுத்துணர்ச்சியாக இலையை சுருக்குகின்றன.

b)

1.அனுசேபத் தொழிற்பாடுகளின்போது தோன்றும் கழிவுப் பொருட்களை உடலிலிருந்து வெளியேற்றும் செயற்பாடு கழிவகற்றல் எனப்படும்.
2.யூரியா, உப்புக்கள், காபனீரொட்சைட்டு வாயு
3.மலம் எனப்படுவது நாம் உட்கொள்ளும் உணவானது அகத்துறிஞ்சப்படுதலைத் தொடர்ந்து எஞ்சிய உணவு ஆகும். இது அனுசேப விளைவு அல்ல எனவே மலமானது கழிவுப் பொருளாக கருதப்படுவது இல்லை.
4.வியர்வை, சிறுநீர், காபனீரொட்சைட் வாயு, யூரிக் அமிலம்
5.மனிதர்களில் சிறுநீரகம், தோல், சுவாசப்பை போன்றவற்றால் சிறுநீர், வியர்வை, $CO_2$ என்பவை வெளியேற்றப்படுதல் மூலம் கழிவகற்றல் செயன்முறை இடம் பெறும்.
தாவரங்களில் பட்டைவில் மற்றும் இலைவாய்களினூடாக சுவாசத்தின் போது தோன்றும் காபனீரொட்சைட்டும் ஒளித் தொகுப்பின்போது $O_2$ வும் அகற்றப்படும்.

c)

1.சவுக்கு முளை, போலிப்பாதம், பிசிர்கள்
2.நேர் ஒளித் திருப்ப அசைவு
நேர்ப் புவித் திருப்ப அசைவு
3. தனிக்கல அங்கி / பல்கல அங்கி தனது சந்ததியின் எதிர்கால நிலவுகைளின் பொருட்டு புதிய சந்ததியைத் தோற்றுவிக்கும் செயன்முறை இனப்பெருக்கம் எனப்படும்.
4.இரண்டு வகைப்படும்.
இலிங்க முறை இனப்பெருக்கம்
இலிங்க நில் முறை இனப்பெருக்கம்.

d)

1.தனிக்கல அங்கிகள் / கலங்களில் சிக்கற்தன்மை அதிகரித்தல் விருத்தி என அழைக்கடும்.
2.மீளாத வகையில் கலங்களின் பருமன் அதிகரித்தல், கலப்பிரிவு மூலம் கலங்களின் எண்ணிக்கை அதிகரித்தல், கலங்கள் வியத்தமடைதல்.

**ஆக்கம் - வி.விநோஜன்**

## இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

**தரம் - 6** | **கணிதம்** | **அலகு 12**

### நேர்கோட்டுத் தளவுருக்கள்

* தளவுருக்கள்

ஒரே தளத்தில் இருக்கும்படி நேர்கோட்டுத் துண்டங்களாலும், வளை கோட்டுத் துண்டங்களாலும் வரையப்பட்ட உருக்கள் கணிதத்தில் தளவுருக்கள் எனப்படும்.

* மூடிய தளவுருக்களும் திறந்த தளவுருக்களும்


கோட்டுத் துண்டங்களால் முற்றாக மூடப்பட்ட உருக்கள் மூடிய தளவுருக்கள் ஆகும்.
கீழே சில மூடிய தளவுருக்கள் தரப்பட்டுள்ளன.



கோட்டுத் துண்டங்களினால் முற்றாக மூடப்படாத உருக்கள் திறந்த தளவுருக்கள் ஆகும்.
கீழே சில திறந்த தளவுருக்கள் தரப்பட்டுள்ளன.




01. பின்வரும் தளவுருக்களில் மூடிய தளவுருக்கள், திறந்த தளவுருக்கள் எனத் தெரிந்தெடுத்து எழுதுக.





* நேர்கோட்டுத் தளவுருக்கள்


நேர்கோட்டுத் துண்டங்களை மட்டும்கொண்ட மூடிய தளவுருக்கள் நேர்கோட்டுத் தளவுருக்கள் எனப்படும்.
கீழே சில நேர்கோட்டுத் தளவுருக்கள் தரப்பட்டுள்ளன.



2.பின்வரும் தளவுருக்களில் நேர்கோட்டுத் தளவுருக்களை இனங்காண்க





* நேர்கோட்டுத் தளவுருக்களின் உறுப்புக்கள்




* நேர்கோட்டுத் தளவுருக்களில் ஒவ்வொரு கோட்டுத் துண்டமும் அதன் பக்கம் எனப்படும்.
* நேர்கோட்டுத் தளவுருக்களில் இரண்டு பக்கங்கள் சந்திக்கும் புள்ளி உச்சி எனப்படும்.
* நேர்கோட்டுத் தளவுருக்களில் இரண்டு பக்கங்கள் சந்திப்பதால் உருவின் உள்ளே உருவாகும் கோணம் தளவுருவின் கோணம் எனப்படும்.

*சில நேர்கோட்டுத் தளவுருக்களும் அவற்றின் பண்புகளும்

**1.முக்கோணி**



* மூன்று பக்கங்களைக் கொண்ட நேர்கோட்டுத் தளவுரு முக்கோணி ஆகும்.
* மிகக் குறைந்த நேர்கோட்டுத் துண்டங்களால் உருவாக்கப்பட்ட மூடிய நேர்கோட்டுத் தளவுரு முக்கோணி ஆகும்.

2.சரிவகம்




* எதிர்ப் பக்கச் சோடிகளுள் ஒரு சோடி மட்டும் மாறா இடைத் தூரத்தில் அமைகின்றது.

3.இணைகரம்



* ஒவ்வொரு சோடி எதிர்ப் பக்கங்களும் மாறா இடைத் தூரத்தில் அமைந்துள்ளன.
* எதிர்ப் பக்கங்கள் நீளத்தில் சமனானவை.

4.சாய்சதுரம்




* ஒவ்வொரு சோடி எதிர்ப் பக்கங்களும் மாறா இடைத் தூரத்தில் அமைந்துள்ளன.
* எல்லாப் பக்கங்களும் சமனான நீளத்தைக் கொண்டவை.

5.செவ்வகம்




* ஒவ்வொரு சோடி எதிர்ப் பக்கங்களும் மாறா இடைத் தூரத்தில் அமைந்துள்ளன.
* எதிர்ப் பக்கங்கள் சமனான நீளத்தைக் கொண்டவை.
* எல்லாக் கோணங்களும் செங்கோணமானவை.

6.சதுரம்



* ஒவ்வொரு சோடி எதிர்ப் பக்கங்களும் மாறா இடைத் தூரத்தில் அமைந்துள்ளன.
* எல்லாப் பக்கங்களும் சம நீளமுடையவை
* எல்லாக் கோணங்களும் செங்கோணங்கள் ஆகும்.

3.பின்வரும் தளவுருக்களை இனங்கண்டு பெயரிடுக




**ஆக்கம் : திரு. சற்குணராசா செந்தூரன்**
**கட்டுறுப்பயில்வு மாணவ ஆசிரியர்**
**யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்**
**யா/தேசிய கல்வியியற் கல்லூரி**
**வழிகாட்டலும் ஆலோசனையும் - திருமதி சுதர்சினி விக்னமோகன்**
**விரிவுரையாளர் யா/தேசிய கல்வியியற் கல்லூரி**

# சில பெண்களுக்கு சலுகை வழங்கினார் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் வீரசேகர

## உயரிய சபையில் வைத்து போட்டுத் தாக்கினார் அநுர



சில பெண்களுக்கு மட்டும் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர சலுகை வழங்குகின்றார் என ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க குற்றம் சுமத்தியுள்ளார்.

நாடாளுமன்றில் கடந்த வெள்ளிக் கிழமை இந்தக் குற்றச்சாட்டை அவர் முன்வைத்துள்ளார்.

சில பெண்களைத் தனிமைப்படுத்த லுக்கு அழைத்துச் செல்லும் போது அவர்களுக்கு ஆடைகளை எடுத்துச் சென்று கொடுக்கும் பொதுப்பாதுகாப்பு அமைச்சர், ஏன் போராட்டத்தில் ஈடுபட்ட பெண்களின் ஆடைகள் கிழிக்கப்பட்டமை தொடர்பில் மனம் இரங்கவில்லை என அநுரகுமார கேள்வி எழுப்பியுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை போராட்டக் காரர்களை பொலிஸார் கைது செய்த மைக்கு எதிர்ப்பை வெளியிடும் வகையில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பிரபல மாடல் அழகி பியூமி ஹன்ச மாலி அண்மையில் கைது செய்யப்பட்டு தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு அழைத்துச் செல்லும் போது பொதுப் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகரவை தொடர்பு கொண்டார் எனவும், ஆடை களை எடுத்துச் செல்ல அனுமதிக்கு மாறு கோரினார் எனவும், அதற்கு அமைச்சர் அனுமதி வழங்கினார் எனவும் கடந்த காலங்களில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

தமக்கு பியூமி அழைப்பு எடுத்தார் எனவும், ஆடைகளை எடுத்துச் செல்ல அனுமதிக்குமாறு பொலிஸாருக்கு அறிவுறுத்தல் வழங்கினார் எனவும் சரத் வீரசேகர ஒப்புக்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில்கடந்தவியாழக்கிழமை போராட்டத்தில் ஈடுபட்ட சில பெண்களை பொலிஸார் பலவந்தமாக பஸ்களில் ஏற் றிச் செல்ல முயற்சித்தபோது அவர்களின் ஆடைகள் கிழிந்திருந்தன. இந்த விட யத்தை சுட்டிக்காட்டியே அநுரகுமார திஸா நாயக்க கடந்த வெள்ளிக்கிழமை நாடாளு மன்றில் குற்றச்சாட்டை முன்வைத்தி ருந்தார்.

இதன் போது தாம் யாருக்கும் ஆடை களை எடுத்துக்கொண்டு செல்லவில்லை எனவும், தனிமைப்படுத்தப்பட்டுள்ள ஜோசப் ஸ்டாலினுக்கு ஆடைகளை எடுத் துச் செல்ல அனுமதித்திருந்தால் அத னையும் நீங்கள் விமர்சனம் செய்வீர் கள் எனவும் சரத் வீரசேகர பதிலளித்தி ருந்தார்.

# ஆயர் தீயோகுப்பிள்ளை ஆண்டகை காலத்தில் முன்வைத்த பதிலை இனிமேலும் தரமுடியாது!

## 'வடக்கு, கிழக்கு ஆயர் மன்றம்' உருவாக்கம் குறித்து கலாநிதி எஸ்.ஜே.இம்மானுவேல் அடிகளார் விளக்கம்


மறைந்த யாழ் ஆயர் மேதகு கலாநிதி வ.தீயோகுப்பிள்ளை ஆண்டகை

'வடக்கு, கிழக்கு ஆயர் மன்றம்' அரசியல் சார்ந்ததல்ல, மாறாக ஆன்மீகம் சார்ந்தது என்ற கடந்த வாரக் கட்டுரையின் இறுதிப்பகுதியில் கலாநிதி எஸ்.ஜே இம்மனுவேல அடிகள் பின்வருமாறு தெரிவித்திருந்தார் :-

### சிங்களக் கத்தோலிக்க மக்களையும் தமிழ்க் கத்தோலிக்க மக்களையும் இணைக்கின்ற பாலம் கத்தோலிக்கம்

கத்தோலிக்கம் சிங்களக் கத்தோலிக்க மக்களையும், தமிழ்க் கத்தோலிக்க மக்களையும் இணைக்கின்ற ஒரு பெரும் பாலமாகும். இலங்கையில் இந்து மதத்திற்கோ, பௌத்த மதத்திற்கோ இல்லாத அல்லது கிடைக்காத அரிய பலம் இதுவாகும். இதனைக் கத்தோலிக்க திருச்சபையின் சிங்கள மற்றும் தமிழ் ஆயர்களைக் கொண்ட தலைமைப்பீடமான இலங்கைக் கத்தோலிக்க ஆயர் பேரவை உரிய விதமாகப் பயன்படுத்தி இலங்கையில் ஒற்றுமையையும் சமாதானத்தையும் கொண்டு வரத் தவறிவிட்டமை கவலைக்குரியது – என்றார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கும் போது –

சிங்களக் கத்தோலிக்க மக்களையும் தமிழ்க் கத்தோலிக்க மக்களையும் இணைக்கின்ற பாலமான கத்தோலிக்கத்தை இலங்கையின் தமிழ், சிங்கள ஆயர்கள் உரிய விதமாகப் பயன்படுத்தி இருந்தால் இலங்கை நாட்டில் ஏராளம் நன்மைகள் ஏற்பட்டிருக்கலாம். ஏன் இனப்பிரச்சினைக்கான தீர்வைக்கூட எட்ட முயற்சித்திருக்கலாம். தமிழ் ஆயர்கள் சிறுபான்மை


மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் மேதகு காலநிதி பொன்னையா யோசவ் ஆண்டகை

யினர் என்பதால் பெரிய தாக்கத்தை ஏற்படுத்த முடியவில்லை. இதனை முழுமையாகப் பயன்படுத்தி சாதித்திருக்க வேண்டிய சிங்கள ஆயர்கள் ஏனோதானோ என்று இருந்து விட்டார்கள். துன்பத்தின் உச்சக்கட்டத்தில் அவலக்குரல் எழுப்பிய தழிழ்க் கத்தோலிக்க மக்களுக்கு சார்பாக சிங்கள ஆயர்கள் இவர்களும் கத்தோலிக்க சமயத்தவர் என்று பெரிதாக குரல் எழுப்பவும் இல்லை, அனுதாபம் தெரிவிக்கவும் இல்லை. இன உணர்வே அவர்களிடம் மேலோங்கி இருந்தது.

### அந்தக்காலத்தில் ஆயர் பேரவை சிங்களவர் பற்றியே கருத்தாக இருந்தது

அந்தக் காலத்தில் ஆயர் பேரவை எப்போதும் பெரும்பான்மை இனத்தவரான சிங்களவரின் தேவைகள், பிரச்சினைகள் பற்றியே எப்போதும் கருத்தாய் இருந்தது. இதனைக் கண்ணுற்றே வ.தீயோகுப்பிள்ளை ஆண்டகை தமிழ் மறைமாவட்டங்களின் தேவைகளையும் பிரச்சினைகளையும் அபிலாஷைகளையும் பற்றிக் கலந்தாலோசிக்க வேண்டும், நிறைவு செய்ய வேண்டும் என்ற நோக்குடன் யாழ்ப்பாணம், திருகோணமலை – மட்டக்களப்பு ஆகிய இரு மறைமாவட்டங்களையும் இணைக்க வேண்டும் என்றார். தீயோகுப்பிள்ளை ஆண்டகை யாழ் மறைமாவட்ட ஆயராகுமுன் திருகோணமலை – மட்டக்களப்பு மறைமாவட்டத் துணை ஆயராக இருந்தமையால் இந்த இரு மறைமாவட்டங்களையும் அவற்றின் தேவைகளையும் நன்கு அறிந்தவராக இருந்தார். அவற்றின் இணைப்பு இரு மறைமாவட்டங்களிடையேயும் புரிந்துணர்வையும் வளர்ச்சியையும் முன்னேற்றத்தையும் கொண்டு வரும் எனத் தூர நோக்குடன் சிந்தித்தார்.

அந்த நேரத்தில் இலங்கைக் கத்தோலிக்க திருச்சபையின் ஒற்றுமை,


மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு காலாநிதி இம்மனுவேல் பெர்ணாண்டோ ஆண்டகை

வளர்ச்சி பற்றியே பெரிதும் சிந்திக்கப்பட்டது. சிங்கள ஆயர்கள் தமது மொழி, கலை, கலாசாரம் போன்ற பிரச்சினைகளிலேயே அதிக கவனம் செலுத்தினர். முக்கிய காரணம் சிங்களக் கத்தோலிக்க திருச்சபை ஒன்றே ஒன்று இருந்து. அவர்களுக்குத் தமது மொழி, கலை, கலாசாரம் பற்றித் துணை நாடிப்போக யாரும் இருக்கவில்லை. இலங்கை சுதந்திரம் பெற்ற காலம் முதல் இலங்கைக் கத்தோலிக்க திருச்சபையிடம் தாம் தனித்து நிற்கிறோம் என்ற பாதுகாப்புப் பயம் இருந்தது.

இதேவேளை ஆயர் வ.தீயோகுப்பிள்ளை ஆண்டகையின் சிந்தனை பெரிதும் எடுபடாது போன போதும், இலங்கைத் தமிழ் மறைமாவட்டங்கள் உரிய விதமாகக் கவனிக்கப்படாத போதும், அது பெரிய விடயமாகத் தெரியவில்லை. இதற்கு முக்கிய காரணம் இலங்கைத் தமிழ்க் கத்தோலிக்க திருச்சபைக்கு மதம், மொழி, கலை, கலாசாரம் அனைத்திலும் உதவிக்கரம் நீட்ட இந்தியாவின் தமிழ்நாடு இருந்தது.

சிங்கள ஆயர்கள் சிங்களக் கத்தோலிக்க திருச்சபை தமது சொந்தத் திருச்சபை என்றும், இலங்கை நாட்டில் தாம் பெரும்பான்மைத் திருச்சபை என்றும், தமிழ்க் கத்தோலிக்க திருச்சபை தம்மோடு இணைந்து தம்மை முழுமைப்படுத்த வேண்டிய ஒரு பகுதி என்றும் கருதினர்.

தமிழ் மக்கள் உரிமைகள் மறுக்கப்பட்டு, அவர்கள் இரண்டாம் தரப் பிரஜைகளாக ஆக்கப்பட்ட போது இந்தியாவால் குரல் கொடுக்க மட்டுமே முடிந்தது. வேறு எதையும் செய்ய முடியாது என்பதை நன்கு தெரிந்தபோது தமிழ் இளைஞர்கள் போராடத் துணிந்தனர்.

மறைமாவட்டங்கள் சார்ந்து அவ்


திருகோணமலை மறைமாவட்ட ஆயர் மேதகு காலாநிதி நோயல் இம்மானுவேல் ஆண்டகை

வாறான நெருக்கடி ஏற்படவில்லை. சிங்கள ஆயர்களால் தவிர்க்கப்பட்ட போதும் தமது தேவைகளை தமிழ் நாட்டில் இருந்து பெறக்கூடியதாக இருந்தமையால் அது பற்றிப் பெரிதும் கவலைப்பட வேண்டிய தேவை ஏற்படவில்லை.

### பிரித்தானியரின் வல்லமை

பிரித்தானியர்கள் தமது நாடுகளை ஆண்ட அனுபவத்துடன் ஒவ்வொரு இனத்தவரின் திறமைகளை அறிந்து அதன்படி அவர்களைப் பயன்படுத்துவதில் வல்லவர்கள். தமிழ் மக்கள் தம் தமிழ் மொழியை நேசிப்பவர்கள், அறிவு படைத்தவர்கள், கல்வி அறிவுடையவர்கள் கடின உழைப்பாளிகள் என்பதை எல்லாம் நன்குணர்ந்து அதைப் பயன்படுத்தினர்.

தமிழர்கள் பொதுவாகவே தலைமைத்துவப் பண்புகள் நிறைந்தவர்கள். இது அவர்களை முன்னுரிமைப்படுத்தியது. படித்த தமிழர் பல உயர் பதவிகளில் அமர்த்தப்பட்டனர். பெரும்பான்மை இனத்தவர் சிறுபான்மைத் தமிழர் உயர் பதவிகளை வகித்தமையால் பொறாமை கொண்டனர். கடின உழைப்பாளிகளான தமிழர்களை இலங்கை, மலேசியா போன்ற இடங்களில் தோட்டத் தொழிலாளிகளாக்கினர். இது சிறுபான்மைத் தமிழர் உயர் பதவிகள் வகுக்க வழி செய்தது. 1979 ஆம் ஆண்டு அப்போதைய யாழ் ஆய


யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஆயர் மேதகு காலநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை

ராகிய மறைந்த மேதகு கலாநிதி வ.தீயோகுப்பிள்ளை ஆண்டகை தமிழ் மறைமாவட்டங்கள் இணைந்து தனி அலகாகச் செயற்பட வேண்டும் என முதலில் வேண்டுகோள் விடுத்தபோது யாழ்ப்பாணம், திருகோணமலை – மட்டக்களப்பு என இரண்டு தழிழ் மறை மாவட்டங்களே இருந்தன.

1993ஆம் ஆண்டு அப்போதைய யாழ் ஆயராகிய மேதகு கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை காலத்தில் யாழ் மறைமாவட்ட மேய்ப்புப்பணி மகாநாட்டில் இக்கருத்து முன்வைக்கப்பட்டு வலியுறுத்தப்பட்ட போதும், 2005ஆம் ஆண்டு இவ் வேண்டுகோள் புதிய திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் அவர்களிடம் சமர்ப்பிக்கப்பட்ட போதும், யாழ்ப்பாணம், திருகோணமலை – மட்டக்களப்பு மற்றும் மன்னார் என்ற மூன்று தழிழ் மறைமாவட்டங்களே இருந்தன.

ஆனால் இன்று யாழ்ப்பாணம், திருகோணமலை, மன்னார், மட்டக்களப்பு என நான்கு தமிழ் மறைமாவட்டங்கள் உள்ளன என்கின்ற வகையில் இவ் வேண்டுகோள் இன்னும் வலிமை பெறுகிறது.

தற்போது வடக்கு கிழக்கு ஆயர் மன்றம் என்ற பெயரில் வடக்கு, கிழக்கின் நான்கு தமிழ் ஆயர்களான யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை, திருகோணமலை மறைமாவட்ட ஆயர் மேதகு காலநிதி நோயல் இம்மானுவேல் ஆண்டகை, மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு காலாநிதி இம்மனுவேல் பெர்ணாண்டோ ஆண்டகை, மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் மேதகு காலநிதி பொன்னையா யோசவ் ஆண்டகை ஆகிய ஆயர்கள் ஒன்றாக இணைந்து அறிக்கைகள் வெளியிடத் தொடங்கியுள்ளனர்.

இலங்கையின் வடக்கு, கிழக்கு தமிழ் மறைமாவட்டங்களை இணைத்து தனி அலகாக்கி மக்களின் ஆன்மீக தேவைகளை முறைப்படியாக கவனிக்க வேண்டிய வழி வகைகளைச் செய்ய வேண்டிய காலம் கனிந்து விட்டது.

ஆயர் தீயோகுப்பிள்ளை ஆண்டகை காலத்தில் தந்த பதிலையே இனியும் தரமுடியாது.

காலைக்கதிர் Kalaikathir
கிறிஸ்தவ செய்தி இதழ்
TCNL
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி – யோவா:18:37
ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்

காலைக்கதிர்
Kalaikkathir

# சமத்துவம் (இருக்கு ஆனால் இல்லை)

## சட்டம் ஒரு வெளிச்ச அறை

பஸ்றி ஸீ.ஹனியா
LL.B (Jaffna)



மரபுகளையும் சமூக வழக்காறுகளையும் மையமாகக் கொண்டு கட்டமைக்கப்பட்டிருக்கும் சட்டமானது யாவருக்கும் சமமான அங்கீகாரத்தையும் சுயகௌரவத்தையும் வழங்கவேண்டிய பாரிய பொறுப்புடமைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இருப்பினும் சட்டம் பற்றிய பல அதிருப்திகள் சாதாரண சமான்ய மக்களிடையே மட்டுமன்றி பல பழுத்த சட்டநியாயாதிக்கவாதிகளிடையேயும் நிலவி வருகின்றது. நாய் என்றால் குட்டை இருக்கும், சட்டம் என்றால் ஓட்டை இருக்கும்.

இவ்வாறான பல விமர்சனங்களுக்கு மத்தியில்தான் சட்டம் இன்றைக்கு உயிர் வாழ்ந்து கொண்டிருக்கின்றது. இருந்தபோதிலும் இலங்கை சட்டம் தொடர்பான பல சர்ச்சைகளும், விடையில்லா வினாக்களும் எழுந்துகொண்டேதான் இருக்கின்றன.

குறிப்பாக தேசவழமைச் சட்டம் இலங்கைத் தீவில் குறிப்பாக வடபுலத்தில் பெண்ணடிமைத்தனத்தையும் சமூக வேறுபாடுகளையும் தொடர்ந்தும் இருப்புச் செய்வதற்கான விசேட பண்புகளைக் கொண்டிருப்பதனால் இவை நவீன காலணித்துவ அரசியல் சித்தாந்தங்கள் மிகவும் எழுச்சியாகப் பேசப்படும் இக்காலகட்டத்தில் இவை தொடர்ந்தும் தேவைதானா என்கின்ற கேள்வியை சாமானியர்கள் மத்தியில் அவிழ்த்து விடுகின்றது.

இதற்கான பதிலை ஆழ்ந்து ஆராய்வதற்கு முன்னர் தேசவழமைச் சட்டம் என்றால் என்ன? என்பது தெரிந்திருக்க வேண்டும். மேலும், தேசவழமைச் சட்டமானது இலங்கையில் எவ்வாறு இத்தனை தாக்கத்தைச் செலுத்தக்கூடிய சட்டமாக இருக்கின்றது என்பதற்கான பதிலும் அறிந்திருத்தல் முதற் கட்டமானது.

நாம் ஆளப்பட்டுக் கொண்டிருக்கும் 1978 ஆம் ஆண்டு இலங்கையின் சோசலிசக் குடியரசானது தனது 16 (1) சரத்திலே எழுதப்பட்ட எழுதப்படாத எல்லாச்சட்டங்களும் இலங்கையில் நடைமுறையில் இருக்கும் என்பதற்கும் மேலாக யாப்பு சட்டத்துக்கும் இந்த எழுதப்படாத எழுதப்பட்ட சட்டங்களுக்கும் இடையிலான முரண்பாடுகள் ஏற்படும் போது தனியார் சட்டங்களே மேலோங்கும் என்பதனை உள்ளங்கை நெல்லிக்கனி ஆகிவிட்டது.



ஆகவேதான் தனியார் சட்டங்களான முஸ்லிம் சட்டம், தேசவழமை சட்டம், கண்டிய சிங்களச் சட்டம் என்பன இற்றைக்கு இலங்கை எனும் வாகனத்தில் சக்கரங்களாக விளங்குவதற்கு பிரதான காரணம் யாப்பில் யாப்பு தனக்குத்தானே வைத்துக்கொண்ட சூனியமே ஆகும்.

தனியார் சட்டமான தேசவழமைச் சட்டம் எவ்வாறு ஆண் – பெண் சமத்துவத்தை பேணி இருக்கின்றது என்பதைப் பின்வருமாறு ஆராய்ந்து பார்ப்போம்.

தேசவழமைச்சட்டம் என்பது இலங்கையின் வடபுலத்தில் வாழும் தமிழ் மக்களின் மரபுசார் பாரம்பரிய சட்டமாகும். இலங்கைத் தீவின் வடபுலத்தமிழர்கள் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலான தனித்துவ மரபுகளைக் கொண்ட இனக்குழுமம் ஆகும். இவர்களின் மரபுகளினதும் வழக்காறுகளினதும் (Customs) தொகுப்பே தேசவழமைச்சட்டமாகும். ஒல்லாந்த ஆட்சியாளர்களினால் 1707 இல் தொகுக்கப்பட்ட இச்சட்டம் 1806 முழுமையான அமுலுக்கு வந்தது.

இருப்பினம் இந்தச் சட்டம் சொத்து மற்றும் திருமணம் தொடர்பான விடயங்களில் மட்டுமே நியாயாதிக்கம் (Jurisdiction) செலுத்துகின்றது. சிவஞானசிங்கம் எதிர் சுந்தரலிங்கம் என்கின்ற வழக்கு தேசவழமைச் சட்டத்தின் முழுமையான பிரயோகத்தை விரிவாக விபரிக்கின்றது.

சட்டத்துக்கு முன் சகலரும் சமம் என்று தம்பட்டமடிக்கும் சட்டம், சில நேரங்களில் இனக்குழுக்களினதும் பிரதேசங்களினதும் தனித்துவத்தைப் பாதுகாக்கின்றோம் என்ற பெயரில் சமத்துவத்தை மறந்து விடுகின்றது.

எது எப்படியாயினும் தேசவழமைச் சட்டம் பெண்களின் உரிமையை பாதுகாப்பதில் பாரிய கேள்வி எழுகின்றது

ஈழத்தமிழர் பண்பாட்டில் பெண்களுக்கான அங்கீகாரம் பல இடங்களில் நிரூபிக்கப்பட்டுள்ளது. தமிழர்கள் தமது சுயநிர்ணய உரிமை போராட்டத்தில் (Self Determination) கூட பெண்களின் பங்கு அபரிதமாக இருப்பினும் தேசவழமைச் சட்டம் அவர்களுக்கான உரிமையைப் பாதுகாக்கின்றதா? இலங்கை ஏனைய சட்ட முறைமைகளான கண்டியன் சட்டம் , முஸ்லிம்களின் சட்டம் என்பன ஒடுக்குமுறைகளை கொண்டிருந்த போதிலும் தேசவழமை மிகப் பரந்த அளவில் பெண்களின் சொத்துரிமையை குறுக்கியுள்ளதோ என்பது பின்வரும் இடங்களில் தோன்றுகின்றது.

### Jaffna Marriage and Registration ordinance

பிரிவு 3, தேசவழமையில் பிறந்த பெண்ணொருவர் தேசவழமைச் சட்டத்தால் ஆளப்படாத ஆணை திருமணம் செய்யும்போது தேசவழமை சார்ந்த எத்தனை உரிமைகளை இழக்கின்றார் என்பது மாபெரும் மனித உரிமை மீறலாகும்.

பிரிவு 6 திருமணம் செய்த பெண் ஒருவர் தனது சொந்தச் சொத்தை விற்பது என்றால் கூட கணவனின் சம்மதம் வேண்டுமென வலியுறுத்துகின்றது.

இப்படியான வழமை நெறி பிறந்த கால கட்டத்திலே இருந்த சமுதாய நிலை வேறு. இன்றைய நிலை வேறு. அன்றைய தேசவழமை மனைவி கல்வியறிவற்ற பேதையாக, உலகறிவு இல்லாத மடந்தையாக இருந்திருப்பாள். இன்று தேசவழமை மனைவிமார் பலர் சட்டத்தரணிகளாகத் தொழில் பார்க்கிறார்கள். அத்தகைய பெண் சட்டத்தரணிகள் மற்றவர்களுக்கு (ஆடவர்களுக்கும் கூட) பின்னவரின் சட்ட உரிமைகளைப் பற்றி ஆலோசனை வழங்குகிறார்கள். ஒப்பந்தங்கள், உறுதிகள் தயாரித்து அத்தாட்சிப்படுத்துகின்றார்கள். ஏனையோருக்காக நீதிமன்றங்களில் வழக்காடுகின்றார்கள். அவ்வாறான பெண் சட்டத்தரணிகளில் ஒருவர் இன்று நீதிபதியாகவும் பொறுப்பேற்று இருக்கின்றார். இந்தநிலையில் தேசவழமை மனைவிமாரை இன்னும் பராயமறியாப் பாலகர் நிலைக்குத் தள்ளி கணவர்களின் ஆதிக்கத்துக்குக் கட்டுப்பட்டவர்களாக்குதல் நியாயமானதாகாது.

நம் நாட்டின் அரசமைப்பும் சர்வதேச மனித உரிமைகள் பிரகடனமும் மட்டுமல்ல பாட்டுக்கொரு புலவன் பாரதி முதல் இன்றைய தமிழ் இலக்கியங்கள் கூட பெண்ணை ஆணுக்கு நிகராகக் கணிக்கின்ற இன்றைய கால கட்டத்தில் தேசவழமை இன்னும் ஒரு மணமான பெண்ணைப் பராயமற்ற பிள்ளை நிலைக்குத் தள்ளுவது எவ்விதத்திலும் நீதியாகாது என்பதை எவரும் ஏற்பர். எனவே, தேசவழமைச் சட்டத்தின் இந்த அம்சம் பொருத்தமான முறையில் திருத்தப்பட வேண்டும் என்பது இங்கே தெளிவு.



சட்டத்துக்கு முன் சகலரும் சமம் என்று தம்பட்டமடிக்கும் சட்டம், சில நேரங்களில் இனக்குழுக்களினதும் பிரதேசங்களினதும் தனித்துவத்தைப் பாதுகாக்கின்றோம் என்ற பெயரில் சமத்துவத்தை மறந்து விடுகின்றது. யாவும் களையப்படும் வரை பெண்ணடிமைத்தனமும், பெண்களுக்கு எதிரான ஒடுக்குமுறைகளும் தவிர்க்க முடியாத அவலங்களாகத் தொடர்ந்தும் நிகழும் என்பதே நிதர்சனம். ஆகவேதான் சட்டங்கள் தானாகத் திருந்தாது ;அவை திருத்தப்பட வேண்டும். அவை திருத்தப்பட வேண்டும் என்றால் அதற்கான உந்தல்கள் வழங்கப்பட வேண்டும். அந்த உந்தல்களை வழங்குவதற்கு எம்மை விட சிறந்த ஆயுதம் எங்கேயும் கிடையாது.

# இணையமூல கற்பித்தலை தவிர்ப்பதற்குத் தீர்மானம்

## இலங்கை ஆசிரியர் சேவைகள் சங்கம் தெரிவிப்பு

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப்ஸ்டாலின் மற்றும் 15 பேரை வலுக்கட்டாயமாக தனிமைப்படுத்திய அரசாங்கத்தின் நடவடிக்கைக்கு எதிராக நேற்று (சனிக் கிழமை) முதல் இணையம் மூலம் கற்பித்தல் நடைமுறைகளை தவிர்க்க இலங்கை ஆசிரியர் சேவைகள் சங்கம் முடிவெடுத்துள்ளது.

சங்கத்தின் தலைமைச் செயலாளர் மஹிந்த ஜயசிங்க இதனைக் கூறியுள்ளார்.

பத்தரமுல்லையில் ஆர்ப்பாட்டத்தை நடத்தியதற்காக கைது செய்யப்பட்ட 33 பேர் கொண்ட குழுவில் இருந்த பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் மற்றும் 15 பேர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்ட பின்னர் தனிமைப்படுத்த உத்தரவிடப்பட்டதாக அவர் கூறியுள்ளார்.

முன்மொழியப்பட்ட சேர் ஜோன் கொத்தலாவல தேசியப் பாதுகாப்பு பல்கலைக்கழக யோசனைக்கு எதிராக அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் கூட்டமைப்பு, ஆசிரியர் சங்கம் மற்றும் முன்னிலை சோசலிசக் கட்சி ஆகியன போராட்டத்தை ஏற்பாடு செய்திருந்தன.

இந்தநிலையில் தொழிற்சங்கங்களின் அதிகாரத்தை தனிமைப்படுத்தலுக்கு அனுப்புவதன் மூலம் அடக்க முடியாது. ஆகையால், அனைத்து ஆசிரியர் தொழிற்சங்கங்களும் இணைய கற்பித்தல் நடைமுறைகளைத் தவிர்க்க முடிவு செய்துள்ளன என்று ஜயசிங்க குறிப்பிட்டார்.

# பொதுப் பாதுகாப்பு அமைச்சர் வீரசேகர பொய்யுரைக்கின்றார்!

## ஜோசப் ஸ்டாலின் குற்றச்சாட்டு



பொதுப் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர பொய்யுரைக்கிறார் என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் குற்றம் சுமத்தியுள்ளார்.

முல்லைத்தீவு தனிமைப்படுத்தல் முகாமில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அவர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டுள்ளார்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு நீதிமன்றம் பிணை வழங்கிய நிலையில் தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்ட விவகாரம் தொடர்பில் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர நாடாளுமன்றில் பொய்யுரைத்தார் என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் –

'வியாழக்கிழமை தனிமைப்படுத்தலுக்கு அழைத்துச் செல்லப்பட்டவர்கள் உரிய சுகாதார வழிகாட்டல்களின் அடிப்படையில் அழைத்துச் செல்லப்பட்டனர் என வெள்ளிக்கிழமை நாடாளுமன்றில் சரத் வீரசேகர கூறுகின்றார்.

எனினும் இது முற்றிலும் பொய்யானது. பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ஒருவர் பரிசோதனை செய்யாது எவ்வாறு தனிமைப்படுத்துமாறு பரிந்துரை செய்வது? இது முற்று முழுவதும் பொய்யானது.

எமக்கு பற்பசை கூட பௌத்த பிக்கு ஒருவர் வழங்கினார். எங்களுக்கு ஒரு துணி துண்டு கூட வழங்கவில்லை. இங்கு இருப்பவர்கள் காலை முதல் கட்டில் விரிப்புக்களை சாரமாக கட்டியிருந்தனர்.

செல்லும் இடத்தில் எல்லாம் உண்டு என பொலிஸார் கூறினர். நீர்கொழும்பு பொலிஸார் எமக்கு மருந்து வழங்கினர் என சரத் வீரசேகர கூறுகின்றார் அது பச்சைப் பொய். சிலாபம் பொலிஸ் நிலையத்துக்கு அருகில் வாகனத்தை நிறுத்தி கால் இறாத்தல் பாணும் ஒரு வாழைப்பழமும் வழங்கினார்கள்.' என ஜோசப் ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார்.

# கொரோனா ஊசிக்கு அலைந்து திரியும் வெளி மாவட்ட பாடசாலை ஆசிரியர்கள்

யாழ்.மாவட்டத்தில் இருந்து முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், வவுனியா மாவட்டங்களுக்கு சென்று கற்பிக்கும் ஆசிரியர்கள் கொவிட் தடுப்பூசி போடுவதற்காக தாம் கற்பிக்கின்ற மாவட்டத்துக்குச் சென்று அங்கு ஊசி போட முடியாதமையால் யாழ்.மாவட்டத்தில் தடுப்பூசி வழங்கும் நிலையங்களுக்கு அலைந்து திரிந்தமையை நேற்று பல இடங்களிலும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

ஆசிரியத் தொழிலில் வெளிமாவட்டங்களில் பெரும்பாலான பெண் ஆசிரியைகள் யாழ்.மாவட்டத்தில் இருந்து பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியிலும் – குடும்பப் பெண்கள் – அதுவும் கைக்குழந்தைகள் உள்ள எத்தனையோ பெண்கள் – பல மைல்தூரம் சிரமங்களுக்கு மத்தியில் கிடைத்த தொழிலைக் கைவிடக்கூடாது என்பதற்காகச் சென்று கற்பிக்கின்றார்கள்.

தற்போது கொரோனாத் தாக்கத்தின் காரணமாக ஆசிரியர்களுக்குத் தடுப்பூசி போடப்படுகின்றது. ஒவ்வொரு பாடசாலை ஆசிரியர்களும் எந்த மாவட்டத்தில் அவர்களது பாடசாலைகள் உள்ளனவோ அந்த மாவட்டத்துக்குச் சென்றே தடுப்பூசி போடவேண்டும் என்ற நிலை. குறிப்பாக துணுக்காய் கல்வி வலயத்தில் கற்பிக்கின்ற ஆசிரியர் ஒருவர் வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட பகுதியில் வசிப்பாராயின் அவர் தடுப்பூசிக்காகத் துணுக்காய் செல்லவேண்டிய அவல நிலை. ஆனால், அவர்கள் அங்கு சென்றும் ஊசியைப் பெறமுடியாமல் தமது பிரதேசத்தில் கிடைக்காதா என அலைந்து திரிகின்றார்கள். அங்கு சுகாதாரப் பணிமனையின் உத்தரவின் கீழ் அவர்கள் திருப்பி அனுப்பப்படுகின்றார்கள்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள 5 கல்வி வலய பிரதேசங்களிலும் 5 நிலையங்களை உருவாக்கி, வெளிமாவட்ட ஆசிரியர்கள் தடுப்பூசி பெறுவதற்கு ஏற்ற சூழலை அமைத்துக்கொடுக்கப்படவேண்டும். கிட்டத்தட்ட ஒரு கல்வி வலயத்தில் 1,000 பேர் வரையிலான ஆசிரியர்கள்தான் வெளிமாவட்டத்தில் கற்பிக்கும் ஆசிரியர்களாக உள்ளார்கள். அவர்களுக்கு தடுப்பூசி வழங்குவதற்கு இரு நாள்கள் போதும். இது தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர், வடக்கு அமைச்சர், மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உரிய கரிசனை எடுத்து செயற்படுவார்களா? என அவர்கள் ஏக்கத்துடன் தெரிவித்துள்ளனர்.

# வாழ்வாதாரம் இழந்த மலையக மக்களுக்கு ஓம் சரவணபவ சேவா சங்கத்தால் உதவி



கொரோனா அச்சுறுத்தலால் வாழ்வாதாரத்தை இழந்துள்ள மலையக மக்களுக்கும் லண்டன் ஓம் சரவணபவ சேவா சங்கத்தின் ஏற்பாட்டில் உலர் உணவுகள் வழங்கி வைக்கப்பட்டன.

கொரோனாவால் பாதிக்கப்பட்ட இராகலை, கந்தப்பளை, நானுஓயா, லிந்துகலை, கொட்டகலை, மஸ்கெலியா, வட்டவளை மற்றும் பின்னோயா ஆகிய பகுதிகளிலுள்ள மக்களுக்கு உலர் உணவுகள் வழங்கி வைக்கப்பட்டன.

முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சரும் தற்போதைய நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கலாநிதி வே.இராதாகிருஷ்ணன் ஊடாக இந்த உலர் உணவுப் பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டன.



மாங்கல்யா

லக்ஷ்மி நாராயணா

இல:- 266 பலாலி வீதி,
கந்தர்மடம் யாழ்ப்பாணம்.

திருமண சேவை
077 197 1667
077 316 4796

**மணமகன் விவரம்**

பிறந்த திகதி – 1988.7.16 மதம் – இந்து
ஜாதி – V ஆண் நட்சத்திரம் – ஆயிலியம் 3
கி.பா – 90 செவ் – 08 இல்
தகைமை – I.T.Engineering
தொழில் – I.T.Engineer Company Colombo
எதிர்பார்ப்பு – படித்த மணமகள் கொழும்பில் வேலை செய்யும் மணமகள் தேவை.

பிறந்த திகதி – 1991.7.21 மதம் – இந்து
ஜாதி – V ஆண் நட்சத்திரம் – அனுசம்
கி.பா – 46 செவ் – 7 இல்
தகைமை – B.sc Civil Engineering
தொழில் – Civil Engineer
எதிர்பார்ப்பு – பட்டதாரி மணமகள் தேவை.

பிறந்த திகதி – 1990.7.03 மதம் – இந்து
ஜாதி – V ஆண் நட்சத்திரம் – விசாகம் 2
கி.பா – 27 செவ் – 6 இல்
தகைமை – M.B.V.S தொழில் – Veterinary Doctor
எதிர்பார்ப்பு – Doctor or Engineer மணமகள் தேவை.

பிறந்த திகதி – 1986.6.21 மதம் – இந்து
ஜாதி – V ஆண் நட்சத்திரம் – கேட்டை 1
கி.பா – 36 செவ் – 11 இல்
தகைமை – TEK
தொழில் – மின்சார சபை உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு – அரச தனியார் மணமகள் தேவை.

பிறந்த திகதி – 1992.1.23 மதம் – இந்து
ஜாதி – V ஆண் நட்சத்திரம் – பூரம்
கி.பா – 15 செவ் – 10 இல்
தகைமை – M.B.B.S தொழில் – Doctor
எதிர்பார்ப்பு – Doctor மணமகள் தேவை.

பிறந்த திகதி – 1990.8.20 மதம் – இந்து
ஜாதி – V ஆண் நட்சத்திரம் – ஆயிலியம் 4
கி.பா – 25 செவ் – 8 இல்
தகைமை –AL (Accountants) தொழில் – UK PR
எதிர்பார்ப்பு – UK or இலங்கை மணமகள்.

பிறந்த திகதி – 1993.1.31 மதம் – இந்து
ஜாதி – V ஆண் நட்சத்திரம் – பரணி 3
கி.பா – 32 செவ் – 6 இல்
தகைமை – B.sc Civil Engineering
தொழில் – work in Singapore
எதிர்பார்ப்பு – Doctor or Engineer மணமகள் தேவை. (காரைநகர் முன்னுரிமை.)

பிறந்த திகதி – 1986.5.01 மதம் – இந்து
ஜாதி – V ஆண் நட்சத்திரம் – திருகோணம்
கி.பா – 53 செவ் – 07 இல்
தகைமை – M.B.B.S தொழில் – Bank Officer
எதிர்பார்ப்பு – அரச சேவை மணமகள் தேவை.

**மணமகள் விவரம்**

பிறந்த திகதி – 1995.12.19 மதம் – இந்து
ஜாதி – V பெண் நட்சத்திரம் – விசாகம் 1
கி.பா – 17 செவ்/சூரி – 11 இல்
தகைமை –B.sc Software Eng தொழில் – Company
எதிர்பார்ப்பு – Canada UK மணமகன் தேவை.

பிறந்த திகதி – 1997.8.4 மதம் – இந்து
ஜாதி – V பெண் நட்சத்திரம் – மகம்
கி.பா – 38 செவ் – 7 இல்
தகைமை – I.CT தொழில் – pharmacist
எதிர்பார்ப்பு – வெளிநாடு, அரச சேவை மணமகன் தேவை.

பிறந்த திகதி – 1994.5.12 மதம் – இந்து
ஜாதி – V பெண் நட்சத்திரம் – ரோகினி
கி.பா – 67 செவ் – 8 இல்
தகைமை – Electronic Engineering
தொழில் – Company
எதிர்பார்ப்பு – பட்டதாரி வெளிநாடு மணமகன்.

பிறந்த திகதி – 1992.11.23 மதம் – இந்து
ஜாதி – V பெண் நட்சத்திரம் – விசாகம் 1
கி.பா – 63 செவ் – 7 இல்
தகைமை – கல்வியியல் கல்லூரி
தொழில் – ஆசிரியர்
எதிர்பார்ப்பு – அரச சேவை மணமகன் தேவை.

பிறந்த திகதி – 1993.11.01 மதம் – இந்து
ஜாதி – V பெண் நட்சத்திரம் – கார்த்திகை 1
கி.பா – 32 செவ் – 4 இல்
தகைமை – IT தொழில் – Company
எதிர்பார்ப்பு – வெளிநாடு மணமகன் தேவை.

பிறந்த திகதி – 1990.12.8 மதம் – இந்து
ஜாதி – V பெண் நட்சத்திரம் – மகம்
கி.பா – 24 செவ் – 8 இல்
தகைமை – – M.B.B.S. தொழில் – Doctor
எதிர்பார்ப்பு – Doctor, Engineer, Bank Accountant மணமகன்.

பிறந்த திகதி – 1993.10.16 மதம் – இந்து
ஜாதி – N பெண் நட்சத்திரம் – சுவாதி 1
கி.பா – 51 செ – 12 இல்
தகைமை – கல்வியியல் கல்லூரி
தொழில் – ஆசிரியர்
எதிர்பார்ப்பு – அரச சேவை, வெளிநாடு மணமகன் தேவை.

பிறந்த திகதி – 1975.722 மதம் – இந்து
ஜாதி – V பெண் நட்சத்திரம் – பூராடம் 4 (5'3")
கி.பா – 48 செவ் – 7 இல்
தகைமை – A/L தொழில் – ஆங்கில ஆசிரியர்
எதிர்பார்ப்பு – படித்த அரச சேவை தனியார் கொம்பனி மணமகன் தேவை.



ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் வெளிவரும் இம் மாங்கல்யா பகுதியில் மணமக்கள் விவரங்கள் பிரசுரிக்க விரும்பின் பின்வரும் தொலைபேசி இலக்கத்தினூடாகவோ அல்லது நேரடியாகவோ அலுவலகத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

காலைக்கதிர் தொலைபேசி 021 222 3000

காலைக்கதிர் Kalaikkathir

# அரசிடம் பல்வேறு கோரிக்கைகள் முன்வைத்து யாழில் ஆர்ப்பாட்டம்





(ந.லோகதயாளன், இ.கலையமுதன்)

அரசிடம் கோரிக்கைகள் சிலவற்றை முன் வைத்து யாழ்ப்பாணத்தில் நேற்று கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

புதிய ஜனநாயக மாக்சிச லெனினிச கட்சியின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்துக்கு முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள், அனைத்து அரசியல் கைதிகளையும் உடனே விடுதலை செய், கொரோனா வைக்காட்டி எங்களை வதைக்காதே!, அனைவருக்கும் தடுப்பூசி வழங்கு!, பாதுகாப்பு வழிகளைச் செய்து பாடசாலைகளைத் தொடங்கு, உணவுப் பொருள்கள் மற்றும் எரிபொருள்களின் விலையை உடனே குறை உள்ளிட்ட வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியிருந்தனர்.

ஆர்ப்பாட்டம் இடம்பெற்ற இடத்துக்கு வந்த யாழ்ப்பாணம் பொலிஸார் போராட்டத்தை நிறைவு செய்யுமாறு வலியுறுத்தியதை அடுத்து, ஆர்ப்பாட்டத்தில் ஈடு பட்டவர்கள் அங்கிருந்து அகன்று சென்றனர்.

## மாகாணங்களுக்கிடை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தற்போதுள்ள கட்டுப்பாடுகளில் பல நேற்று முதல் தளர்த்தப்பட்டுள்ளன. இருப்பினும், மாகாணங்களுக்கிடையேயான பயணக் கட்டுப்பாடுகள் நேற்றிலிருந்து மேலும் 14 நாள்களுக்கு நடைமுறையில் இருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, நாட்டிலுள்ள அனைத்து வழிபாட்டுத் தலங்களையும் திறக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் திருமண வைபவங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையில், திருமண மண்டபங்களில் 25 சதவீதம் அல்லது 150 இற்கும் குறைந்த அளவில் நபர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்றுக்குள்ளாகாத மரணங்களின் இறுதிக்கிரியைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையில், குறித்த சடலம் விடுவிக்கப்பட்டு 24 மணித்தியாலங்களுக்குள் இறுதிக்கிரியைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும், புதிய சுகாதார வழிகாட்டுதல்களுக்கு அமைவாக இறுதிக் கிரியைகளில் 50 பேர் கலந்துகொள்ளலாம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேபோல், அனைத்து அரசு மற்றும் தனியார் நிறுவனங்களின் செயல்பாடுகள் புதிய இயல்புநிலைக்கு ஏற்ப இருப்பதை உறுதி செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளதுடன், அத்தியாவசியச் செயற்பாடுகளுக்காக குறைந்தபட்ச ஊழியர்களுடன் தொடர்ந்து செயல்பட முடியும் என்றும், நிறுவனத்தின் தலைவர் இது தொடர்பான முடிவை எடுப்பதற்கு அதிகாரம் பெற்றவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தியாவசிய கூட்டங்கள் 25 வீத இருக்கைகளுடன் அனுமதிக்கப்பட்டுள்ள அதேவேளை, மாநாடுகள், கருத்தரங்குகளை 50 பங்கேற்பாளர்களுடன் நடத்துவதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதேபோல், பொதுப்போக்குவரத்து சேவைகள் 50 வீத வரையறுக்கப்பட்ட இருக்கை கொண்டதாக நாடு முழுவதும் செயற்பட அறிவுறுத்தப்பட்டுள்ள அதேவேளை, மேல் மாகாணத்துக்குள் 30 வீத இருக்கைகளுடன் சேவைகளை செயற்படுத்த முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார மத்திய நிலையங்களைக் கடுமையான சுகாதார வழிகாட்டுதலின் கீழ் மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது.

தொலைபேசி விற்பனையாளர்கள், வீதியோர விற்பனையாளர்கள் மற்றும் சில்லறை கடைகள், மளிகைக் கடைகள், பேக்கரிகள் சுகாதார வழிகாட்டுதலின் கீழ் செயற்பட அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

தகவல் தொடர்பு/ புகைப்பட நகல் நிலையங்கள் மற்றும் பிற சில்லறை/ சேவை தொடர்பான கடைகள், தளபாடக் கடைகள், சலவை சேவைகள், வன்பொருள் கடைகள், நூலகங்கள், உணவகங்கள், ஸ்பாக்கள், ஹோட்டல்கள் மற்றும் ஓய்வு இல்லங்கள் ஆகியவை சுகாதார வழிகாட்டு தலின் கீழ் செயற்பட அனுமதிக்கப்பட் டுள்ளது.

அழகு நிலையங்கள் மற்றும் முடிதிருத்தும் கடைகள் சேவைகளைத் தொடர அனுமதிக்கப்பட்டுள்ளது.

உடற்பயிற்சிக் கூடங்கள், உட்புற விளையாட்டு மையங்கள், நீச்சல் குளங்கள் இந்தக் காலகட்டத்தில் பொதுமக்களுக்காக திறந்திருக்கும் என்றும் புதிய சுற்றறிக்கை ஊடாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஜனாதிபதி - கூட்டமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த நாட்டின் ஜனாதிபதிக்கும் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் கடந்த மாதம் 16ஆம் திகதி கூட்டம் நடைபெறுவதாக இருந்தது. ஆயினும், இரண்டு தடவைகள் தொலைபேசி அழைப்புக்கள் மூலமாக அது பிற்போடப்படுவதாக எங்களுக்கு அறிவிக்கப்பட்டது.

இதற்கு மேலாக அந்தச் சந்திப்பு இடைநிறுத்தப்பட்டதால் அதனால் ஏற்பட்ட சிரமத்துக்கு வருந்துவதாக கடிதம் மூலமாக இரண்டு தடவைகள் எம்மிடம் தெரிவிக்கப்பட்டிருந்தது. சிரமத்துக்கு வருந்துகின்றோம்; வெகுவிரைவிலே அந்தக் கூட்டம் நடைபெறும் என்று எழுத்திலே அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால்; அதற்குப் பின்னர் இதுவரையில் எந்தவித அறிவித்தலும் இன்னமும் எங்களுக்கு வரவில்லை. அவ்வாறான அறிவிப்புக்கள் ஏதும் வந்தால் அதன் பின்னர் பார்த்துக் கொள்ளலாம் - என்றார்.

## அரசின் அராஜ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்டவர்கள் சட்டவிரோதமாகக் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருப்பதற்கும் வன்மையான கண்டனத்தை தெரிவித்துள்ளார்.

யாழ்.தெல்லிப்பழையில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கொரோனாவை வெறுமனே சாட்டாகக் காண்பித்தக் கொண்டு மிக மோசமான முறையிலே பாதகாப்புப் படையினரை ஏவி இந்த அரசின் எதிர்ப்பாளர்களைக் கைது செய்வதும் நீதிமன்றம் அவர்களைப் பிணையில் விட்டாலும் அவர்களைத் தனிமைப்படுத்தலுக்கு அழைத்துச் செல்வதாகச் சட்டவிரோதமாக கடத்திச் சென்று சட்டவிரோதமாக தடுத்துவைப்பதும் இலங்கைப்பொலிஸாரினாலே இப்போது செய்யப்பட்டு வருகின்றது.


தற்போது ஜோசப் ஸ்டாலின் கைது செய்யப்பட்டிருக்கின்றார். அதேபோன்று கடந்த காலங்களில் வேறு பலரும் கைதுசெய்யப்பட்டிருக்கின்றார்கள். வயதான பெண்மணிகள், பெண்கள் எனப் பலரும் பொலிஸாரால் பலவந்தமாக இழுத்தச் செல்லப்படுவதை நாங்கள் காணொளிகள் ஊடாகப் பார்த்தோம்.

அதேவேளையில் பஸில் ராஜபக்ஷ நாடாமன்றத்துக்கு வருகின்றார் என்பதைக் கொண்டாடுவதற்கு பெரியதொரு கூட்டம் நாடாளுமன்ற வளாகத்திலேயே சேர்ந்து கொண்டாடினார்கள். அதேபோன்று யாழ்ப்பாணம் உட்பட பல இடங்களிலும் பலர் சேர்ந்து பட்டாசு வெடித்து கொண்டாடினார்கள்.

இவற்றையெல்லாம் எவரும் தடுக்கவில்லை. கொரோனாவுக்கு ஆட்கள் ஒன்றுகூடக் கூடாது என்றால் பஸிலை வரவேற்கும் கொண்டாட்டங்களில் கலந்து கொண்டிருந்தவர்களும் கைதுசெய்யப்பட்டிருக்க வேண்டும். ஆனால், இப்படியாகத் தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் எவரையும் கைது செய்வதற்கோ அல்லது நடமாடுவதைத் தடுப்பதற்கோ, எதிர்ப்புப் போராட்டங்களை நிறுத்தவதற்கோ சட்டத்தில் இடம் கிடையாது.

வெறுமனே தாங்கள் நினைத்தபடி அராஜகமான முறையிலே அரசு செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. அரசின் இத்தகைய சட்டவிரோத செயற்பாடுகளுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்மையான கண்டனங்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன் - என்றார்.

## முல்லையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள ஸ்டாலின் உட்பட்டவர்களுக்கு மாற்று உடை



கொழும்பில் கைதுசெய்யப்பட்டு முல்லைத்தீவு விமானப்படை முகாமில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள இலங்கை ஆசிரியர் சங்கத் தலைவர் ஜோசப் ஸ்டாலின் உட்பட்டவர்களுக்கு யாழ்.மாநகர மேயர் வி.மணிவண்ணன், வலிகாமம் கிழக்கு பிரதேச சபை தவிசாளர் தியாகராஜா நிரோஷ் உட்பட்டவர்களால் மாற்று உடைகள் கையளிக்கப்பட்டுள்ளன.

ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக சட்டமூலத்துக்கு எதிராக கொழும்பில் சுகாதார நடைமுறைகளை மீறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டில் முல்லைத்தீவுக்கு அழைத்துவரப்பட்டு இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் ஜோசப் ஸ்டாலின் உட்பட்ட 31 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

மறுநாள் அவர்கள் தொடர்பிலான படங்கள் வெளியாகியிருந்த நிலையில் அவர்களுக்கு மாற்று உடைகள் கூட வழங்கப்படாத நிலையில் பராமரிப்புக்காக அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த போர்வைகளை அவர்கள் மாற்று உடைகளாக அணிந்திருந்தமை அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது.

இந்நிலையில், மூத்த சட்டத்தரணி யோதிலிங்கம் மற்றும் யாழ்.மாநகர சபை மேயர், வலிகாமம் கிழக்கு பிரதேச சபை தவிசாளர் உட்பட்டவர்கள் இன்று வட்டுவாகல் பகுதிக்குச் சென்று அவர்களுக்குத் தேவையான மாற்று உடைகளைக் கையளித்தனர்.

## தமிழ் ஊடகத்துறை...

(05 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆனாலும் ஒரு விடயம். சிவநாயகம் ஐயாவும் இது போல பல தொடர்கள் எழுதியவர். என் ஆசானின் அந்தத் தொடர்களைப் படித்தோருக்கு இதில் ஓர் ஒற்றுமை தென்படும். அவரும் தம் தொடர்களில் இப்படிப் பிரதான விடயத்தில் இருந்து விலகி ஓடி, சில விடயங்களைச் சொல்லுவார், பின்னர் அந்த வேகத்திலேயே மைய விடயத்துக்குத் திரும்பி விடுவார். அது போல அவரின் நினைவுப் பகிர்வு ஊடாக சேர்த்து சில விடயங்களை நானும் சொல்கிறேன். அவ்வளவுதான்.

(வளரும்)

# இறுதி அத்தியாயத்தை நெருங்கியுள்ளது அரசு



## சம்பிக்க எதிர்வுகூறல்

ஜனநாயக கொள்கைகளுக்கு முரணாகவே அரசாங்கம் செயற்படுகிறது. நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து அரசாங்கத்துக்கு எதிராகப் போராட வேண்டும். அரசாங்கம் இறுதி அத்தியாயத்தை நெருங்கியுள்ளது.

பொருளாதார வீழ்ச்சிக்கு ராஜபக்ஷர்கள் பொறுப்புக் கூற வேண்டும். இந்த விடயத்தில் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ மாத்திரம் விதிவிலக்கல்லர் என நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மக்களின் பேச்சு சுதந்திரம் பலவந்தமான முறையில் அடக்கப்படுகிறது. இதற்கு கொவிட் தனிமைப்படுத்தல் சட்டம் பயன்படுத்திக் கொள்ளப்படுகிறது. கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக சட்ட மூலத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து சிவில் அமைப்பினர் நாடாளுமன்ற சுற்றுவட்டத்தில் போராட்டத்தை முன்னெடுத்தார்கள்.

இந்தப் போராட்டத்தை பொலிஸார் பலவந்தமான முறையில் அடக்கினார்கள். ஆனால் நிதியமைச்சராக பஸில் ராஜபக்ஷ பதவியேற்றமையை வீதியில் பட்டாசு வெடித்து கொண்டாடிய தரப்பினர்களைப் பொலிஸார் கவனத்தில் கொள்ளாமல் இருந்தமை ஆச்சரியத்துக்குரியது.

ஜனநாயகக் கொள்கைக்கு முரணாக அரசாங்கம் செயற்படுகிறது. பேச்சு சுதந்திரம் சர்வாதிகரமான முறையில் முடக்கப்படுகிறது. இவ்வாறான நிலையில் செயற்பட்ட அரசியல் தலைவர்கள் இறுதியில் மக்களால் புறக்கணிக்கப்பட்டமையை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் விளங்கிக் கொள்ள வேண்டும். அரசாங்கம் இறுதி அத்தியாயத்தை நெருங்கியுள்ளது.

அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்களை ஐக்கிய மக்கள் சக்தி இனி தலைமையேற்று முன்னெடுக்கும். அரசாங்கத்தின் குறைபாடுகளை பகிரங்கப்படுத்தும் ஊடகங்களுக்கு எதிரான செயற்பாட்டை அரசாங்கம் முன்னெடுத்துள்ளது. இதற்கு வெளிநாட்டு நிறுவனங்களும் ஒத்துழைப்பு வழங்கியுள்ளன.

ஊடக சுதந்திரத்தை பாதுகாக்க ஐக்கிய மக்கள் சக்தி முன்னின்று செயற்படும். ஊடகங்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டுள்ள சூழ்ச்சிகளை ஒருபோதும் வெற்றி பெறச் செய்ய இடமளிக்க மாட்டோம். அரசாங்கத்திற்கு நாட்டு மக்கள் ஜனநாயக ரீதியில் பாடம் புகட்டுவார்கள். - என்றார்.

# லம்ப்டா கொவிட் வைரஸ் பிறழ்வு இலங்கையிலும் பரவும் ஆபத்து!

லம்ப்டா கொரோனா வைரஸ் பிறழ்வு இலங்கையிலும் பரவுவதற்கான அபாயம் ஏற்பட்டுள்ளது என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் பொது மக்கள் மிகவும் பொறுப்புடன் செயற்பட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

லம்ப்டா வைரஸ் பிறழ்வு தொடர்பில் சுகாதார அமைச்சு மிகுந்த அவதானத்துடன் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளதாகவும், இந்த வைரஸ் பிறழ்விற்கான மாதிரிகளைத் தொடர்ந்தும் பரிசோதித்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

லம்ப்டா கொரோனா வைரஸ் பிறழ்வு நாட்டுக்குள் பரவாதிருப்பதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியம் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.


















இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.07.2021 இல் வெளியிடப்பெற்றது.



# பொது அறிவு தினசரி ஒரு பரீட்சை

இந்த கொரோனாப் பெருந்தொற்றுக் காலத்தில் வீட்டில் மூழ்கிக் கிடக்கும் உங்களுக்கு அறிவைத் தூண்டும் ஒரு பொது அறிவுப் பரீட்சையை அறிமுகம் செய்கின்றோம். தினமும் பத்துக் கேள்விகள் இப்பகுதியில் இடம் பெறும்.அன்றன்று கேள்விக்குரிய உங்கள் பதில்களைத் தேடிக் கண்டுபிடித்து தயார் செய்யுங்கள்....
அதனை அடுத்த நாள் காலை 8 மணிக்கு முதல் Kalaikkathiredu@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரி மூலம் எங்களுக்கு அனுப்பி வையுங்கள்.
கேள்வி பிரசுரமாகி இரண்டாவது நாளில் அக் கேள்விக்குரிய விடைகளும், சரியாக விடையளித்த பத்துப் பேரின் விவரங்களும் பிரசுரமாகும்.
தொடரின் முடிவில் அதிக எண்ணிக்கையான தடவைகள் சரியான பதிலை அனுப்பியவர்களுக்கு தகுந்த பரிசில்கள் காத்திருக்கின்றன.
உங்கள் பதிலை அனுப்பும்போது உங்கள் பெயர், முகவரி, அடையாள அட்டை இலக்கம் ஆகியவற்றை குறிப்பிடத்தவறாதீர்கள்.

தொகுப்பு:-
எஸ். சாரலன்

## 47ஆவது போட்டிக்குள் நுழைவோமா?

**461.ஒரு செவ்வகத்தின் நீளம், அகலம் முறையே 20m, 5m எனின் செவ்வகத்தின் பரப்பளவுக்கு சமனான சதுரத்தின் சுற்றளவு யாது?**

**462.பனையின் இளையது எவ்வாறு அழைக்கப்படும்?**

**463.இறுதியாக நடைபெற்ற யூரோ கிண்ண கால்பந்தாட்டத் தொடரை கைப்பற்றிய அணி எது?**

**464.சர்வதேச உலக கோப்பையை இலங்கை அணி எந்த நாட்டில் வைத்துக் கைப்பற்றியது?**

**465. 1/81,1/2,2,8,.......என்ற எண் தொடரின் அடுத்து வரும் இரு எண்களும் எவை?**

**466.ஆவர்த்தன அட்டவனையில் 1 ஆம் கூட்ட மூலகங்கள் எவ்வாறு அழைக்கப்படும்?**

**467.25 ஆண்டுகள் நிறைவில் கொண்டாடப்படும் விழா எவ்வாறு அழைக்கப்படும்?**

**468.அஸ்ராஜெனெகா கொரோனாத் தடுப்பூசி எந்த நாட்டினுடையது?**

**469.அதிர்வு எண்ணின் அலகு யாது?**

**470. தென்னாபிரிக்க நாட்டில் முதலாவதாக சிறைக்குச் சென்ற முன்னாள் அதிபர் யார்?**

பெயர் :- ..................................................
அடையாள அட்டை:- ..................................
முகவரி :- ..................................................
மின்னஞ்சல் முகவரி:- ..................................
தொலைபேசி இலக்கம்:- ..............................

## 45ஆவது போட்டிக்குரிய பதில்கள்

**441.பஸில் ராஜபக்ஷ**
**442. தசுன் சாணக**
**443. முதலாவது முறை**
**444. ஹைற்றி நாட்டின்**
**445. தென்னாபிரிக்கா**
**446. 28.39**
**447. Programmable Read Only Memory**
**448. பஸில் ராஜபக்ஷ**
**449. சூயஸ் கால்வாய்**
**450. திருகோணமலை**

## 09ஆம் திகதி வெளியான 45ஆவது போட்டிக்கு சரியான விடையளித்தோர் விவரம்

எஸ். ஸ்ரீஇராமச்சந்திரன்
கே. அனுஷன் - ஏழாலை
பி.ஸ்ருதி - மட்டக்களப்பு
துவாரகா - மட்டக்களப்பு
ஜெ. வினோஜன் - குடத்தனை
த.சராதரன் - குப்பிளான் (09 சரி)
ஏ.துஷான் - நீர்வேலி - (09 சரி)
பி.தனுஜா - நேரியகுளம் (09 சரி)
எஸ். சதுர்ஜினி - அல்வாய் (09 சரி)
ஜ. கார்த்திகன் - யாழ்ப்பாணம் (09 சரி)
யு.யாமளை - கொழும்பு (8சரி)
எஸ்.கீர்த்திகா - இனுவில் (7சரி)
கே. ஸ்ரீதரன் - கொழும்பு (07 சரி)
ஆர்.மாலதி - உடுப்பிட்டி (7சரி)

## வியாழேந்திரன் மெய்க்காவலர் விளக்கமறியல் காலம் நீடிப்பு

மட்டக்களப்பில் பொதுமகன் மீது துப்பாக்கிச் சூடு நடத்திய சம்பவத்தில் கைது செய்யப்பட்ட அமைச்சர் வியாழேந்திரனின் மெய்ப்பாதுகாவலரை எதிர்வரும் 12 ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிவான் எ.சி.எம். றிஸ்வான் உத்தரவிட்டார்.

கடந்த ஜூன் மாதம் 21 ஆம் திகதி இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரனின் மெய்ப்பாதுகாவலர் பொதுமகன் மீது துப்பாக்கி சூடு நடத்தியதில் 34 வயதுடைய மகாலிங்கம் பாலசுந்தரம் என்பவர் கொல்லப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாகக் கைதுசெய்யப்பட்ட மெய்ப்பாதுகாவலர் விளக்கமறியலில் இருந்து வரும் நிலையில் வெள்ளிக்கிழமை மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் நீதிவான் ஏ.சி.எம். றிஸ்வான் முன்னிலையில் வழக்கு விசரணைக்கு எடுக்கப்பட்டது. குறித்த மெய்ப்பாதுகாவலருக்கு கொரோ னாத் தொற்று காரணமாக நீதிமன்றத்துக்கு அழைத்துவர முடியாத நிலையில் இந்த வழக்கு விசாரணை இடம்பெற்றது.

இதன்போது குறித்த சந்தேக நபரான மெய்ப்பாதுகாவலரை எதிர்வரும் 12 ஆம் திகதி திங்கட்கிழமை வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

## சட்டவிரோத இடியன் துப்பாக்கியுடன் மாங்குளத்தில் ஒருவர் கைதாகினர்



முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அம்பாள்புரம் பகுதியில் சட்டவிரோத இடியன் துப்பாக்கியுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மல்லாவி புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து விசேட அதிரடிப் படையினருக்கு தகவல் வழங்கப்பட்டதை அடுத்து குறித்த இடத்திற்குச் சென்ற விசேட அதிரடிப் படையினர் சட்டவிரோத இடியன் துப்பாக்கியையும் அதனை வைத்திருந்த நபரையும் கைது செய்து மாங்குளம் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளை மாங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## தூக்கில் தொங்கிய நிலையில் பெண்ணின் சடலம் மீட்கப்பட்டது

திருகோணமலை - உப்புவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சாம்பல்தீவு பகுதியில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமொன்று மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்தச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை இடம் பெற்றுள்ளது. சாம்பல்தீவு - நான்காம் வட்டாரம் பகுதியைச் சேர்ந்த 30 வயதான இளம் பெண் ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குடும்பத்தகராறு காரணமாக பிரிந்து வாழ்ந்து வந்த நிலையில் அவரது வீட்டில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார் எனவும் தெரியவருகின்றது.

மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகிறோம் என உப்புவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

## வெளிநாடுகளில் தொழில்புரிந்த இலங்கையர்கள் 124 பேர் கொரோனாத் தொற்றினால் உயிரிழப்பு

வெளிநாடுகளில் தொழில்புரிந்த இலங்கையர்கள் 124 பேர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்துள்ளனர்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் ஊடகப் பேச்சாளர் மங்கள ரன்தெனிய இதனைத் தெரிவித்துள்ளார்.

16 நாடுகளில் தொழில்புரிந்து வந்த புலம்பெயர் தொழிலாளர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு நட்டஈடு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

உயிரிழந்தவர்களுக்காக அவர்களின் குடும்பத்தினரால் முன்னெடுக்கப்படும் மரண சடங்குகளுக்காக தலா 40 ஆயிரம் ரூபா கொடுப்பனவும் பெற்றுக்கொடுக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த குடும்பங்களுக்குத் தலா 5 லட்சம் ரூபா நட்ட ஈட்டை பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.